# NANDANAR

(TAMIL)

REGISTRAR OF BOOKS
20 NOV 1924

BY
S. SAHADEVA MUDALIAR
*Senior Tamil Pandit, Wesleyan Mission High School,*
*Thiruvallur*

MADRAS:
'SWAMY NAIDU & SONS
1924

[Price 4 As.

O23Wx1:d
N24
185365

# நந்தனார்

திருவள்ளூர் வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
**சேலை-சகதேவ முதலியார்**
எழுதியது

சென்னை
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1924

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 4 அணா

922.945
38448

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

183368
600 008

# முன்னுரை

செந்தமிழ்ச் செல்வர்காள்! சிவபத்தியிற் சிறந்த வுணர்வுடன் வந்து தோன்றிய நாளைப்போவார் என்னும் இந் நந்தனார் சரிதை பெரிய புராணத்தையும், நந்தனார் கீர்த்தனையையும் ஆதாரமாக் கொண்டு எழுதப்பட்டது. நந்தனார் ஆதனூர் அந்தணர்க்கு அடிமைப்பட்டிருந்தமை சேக்கிழார் வாக்கிலில்லையாயினும், கீர்த்தனையிற் கண்டுள்ள வரலாற்றினைக் கொண்டு, ஆண்டானாகிய அந்தணரின் தன்மையையும் குணத்தையும் சிறக்க அமைத்து எழுதலாயிற்று. நாயனார், வரலாற்றினால், எச்சாதியானாயினும் இடத்துக்கும் இருப்புக்கும் தக்கபடி தன் கடமைகளைத் திரிகரண சுத்தியாய்ச் செய்து முடிப்பானாயின், அவன் நற்கதியடைவது திண்ணம் என்பதோர் உயர்ந்த உண்மை அங்கைக்கனியென விளங்கி நிற்பதைச் சிறுவர் மனங்கொண்டு காண்பாராக. இப் பெரியோன் தொன்மை வரலாற்றைச் சிறியேன் சிற்றறிவு கொண்டு எழுதத் துணிந்தமையைத் தமிழுலகம் தயை புரிந்தேற்கத் தயாபரனைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

சேலை,
5-9-24 } சகதேவன்.



20 NOV 1924

# நந்தனார்

## 1. தெய்வக் குழந்தை

### விளையும் பயிர் முளையில்

அமிழ்தினு மினிய தமிழ்மொழி வழங்கும் தென்னாடென்னும் இந் நாட்டின்கண் பன்னூ றாண்டுகட்கு முன்னர், பாண்டியன், சோழன், சேரன் என்னு மூவேந்தர் அரசாட்சி புரிந்து வந்தனர். இது வடக்கே திருவேங்கடத்தையும், தெற்கே குமரியாற்றையும், மற்றிருபக்கங்களிற் கடலையும் எல்லைகளாகவுடையது. மதுரையும் நெல்வேலியும் பாண்டி நாட்டிலும், தஞ்சையும் உறையூரும் சோழ நாட்டிலும், கொச்சியும் திருவாங்கூரும் சேர நாட்டிலும் அடங்கியிருந்தன. சோழ நாட்டில் பேர் போன கோயில்கள் அநேகம் உண்டு. அவைகளில் மிகச் சிறந்தன சீர்காழி, சிதம்பரம் முதலியனவாம். சீர்காழிக்குத் தென் மேற்கில் காத தூரத்தில் ஆதனூர் என்னுமோர் சிற்றூருண்டு. இது மிகப் பழமையான தோர் பதியாகும். இங்குக் காவேரியின் கிளைநதியாகிய கொள்ளிடத்தின் கொள்ளை கொண்ட வெள்ளம் பாய்வதால் இது நீர்நிலவளங் களிற் சிறந்தது. வயலிடங்களில் எங்கு பார்க்கினும் பயிர் பச்சைகள் பரந்து அங்கங்கே தோப்புகளும்,

தோட்டங்களும் புனங்களும் புற்றரைகளும் நிறைந்து
கண்ட விடமெல்லாம் கண்குளிர்ச்சியைத் தரத்தக்க
தாக விருந்தது. அதில் நன்செய் புன்செய்களின்
விளைவுகளாம் நவதானியங்களும் மலிந்து கிடக்க,
தானிய லட்சுமி தாண்டவஞ் செய்துகொண் டிருந்
தனள். ஆகையால் அங்குக் குடிவளத்திற்குக் குறை
யொன்றுமில்லை. அவ்வாதனூரின்கண் ஏகாலியர், நாவி
தர், பணிசெய்வோர், தலையாரிகள் முதலிய சூத்திர வரு
ணத்தார் வசிக்கும் நிழல் வேய்ந்த வீடுகளமைந்த
வீதி ஓர் புறமும்; வித்தும் ஏரும் வைத்துக்கொண்டு
விளை நிலங்களை உழுது பயிர் செய்து, பலவாகிய
தானிய வகைகளை விளைவித்துக் களஞ்சியங்களிற்
கட்டிக் காத்து இரந்தோர் துறந்தோர் முதலியவர்
களுக் கெல்லாம் தான தருமங்கள் செய்தும், ஆடை
மளிகை கறிவகைகள் முதலிய பொருள்களைத் தங்களி
டங் கொண்டுவந்து கொடுத்துத் தானியங்களை வேண்டு
பவர்க்கு அக்கஞ் சுருக்காது அளவு குறைக்காது பாவ
புண்ணியங்களுக்குப் பயந்து தருமத்துக்குப் பொது
வாய் அவற்றைப் பண்ட மாற்று செய்தும், இல்லறத்
தையே நல்லறமாகக் கொண்டு குடித்தனம் பண்ணி
வாழ்பவர்களாகிய வேளாளரென்று வழங்கப்பட்ட
பூவைசியர் தம் தட்டோட்டுக் கட்டடங்கள் ஓர் புற
மும்; வேதம் ஓதுதலும் அதைப் பிறருக்கு ஓதுவித்
தலும், ஓமம் செய்தலும், அதைப் பிறருக்குச் செய்
வித்தலும், ஏற்றோர்க்கு ஈதலும், சடங்குகளில் மற்
றைச் சாதியார் ஈதலை அளவு கருதாது அமைவுடன்
ஏற்றலும் ஆகிய இவ்வறு தொழில்களையு முடைய
அந்தணர் அகங்கள் பந்தியா யமைந்த அக்கிரகாரம்
ஓர்புறமும் அமைந்திருந்தன. இப் பார்ப்பனர்களிற்



சிலர் தங்களுக்குக் கோயில் திருப்பணிக்காகவும்,
புரோகித கன்மத்துக்காகவும், உவாத்திமைத் தொழி
லுக்காகவும் விடப்பட்ட மானியங்களைத் தாங்களே
அடிமைகளைக் கொண்டு பயிர் செய்வித்து, அதனால்
வரும் பலனைப் பெற்று, அவர்களையும் அன்புடன்
பாதுகாத்துத் தாமும் ஒழுக்கத்திற் குறையாது ஓங்கி
வாழ்வர்.

ஊரென் றிருந்தால் சேரி யொன் றிருக்கு மல்
லவா? அவ்வாறே இவ் வாதனூரைச் சார்ந்த புலைப்
பாடி யொன்றுண்டு. அது ஒருதெரு இருவாடை
கொண்டது. அது சிறிதும் பெரிதுமாகிய கூரைக்
குடிசைகளா லமைந்தது. அக் கூரைகளின்மேல்
சுரை பூசணைக் கொடிகள் படர்ந்தோடிப் பச்சைப்
பசேரென்று கிடக்கும். இறப்புக்களில் தோல் வார்
கள் தொங்கிக்கொண் டிருக்கும். தாம் பொரித்த
குஞ்சுகளோடு பெட்டைக் கோழிகள் சிந்திக்கிடக்
கும் தானிய முதலியவற்றைக் குத்தித் தின்று
கொண்டு வெயில் உறைக்கும் உச்சிவேளையில் பக்
கத்திலுள்ள மரத்தடிகளிலும் செடியோரங்களிலும்
ஒதுங்கிப் பதுங்கிக்கிடக்கும். நாய்கள் நிற்க நேர
மில்லாமல் வெற்றெலும்புகளைக் கௌவிக் கடித்துத்
தின்று பசியாறி இங்கு மங்கு மோடிக் குரைத்துக்
கொண் டிருக்கும். செம்மை மயிரும் கரிய மேனி
யுங் கொண்ட சேரிச் சிறுவர்கள் வாரிற்கோத்த
இருப்பு மணிகளை இடுப்பிற் கட்டிக்கொண்டு வீதியில்
ஆடிப் பாடித் திரிவர். சிறுமியர் தெருவில் ஓலைப்
பாய்களை விரித்து அவைகளின்மேல் நெல் கேழ்
வரகு முதலிய தானியங்களைப் பரப்பித் திராவி

உலர்த்திக்கொண்டும், வாயில் வந்ததைப் பாடிக்கொண்டும், வருகிறவர் போகிறவர்களோடு ஏதோ வொன்றைப் பேசிக்கொண்டும் இருப்பர். சேரிப் பறையர் கோழி கூப்பிடப் படுக்கைவிட் டெழுந்து பரபரப்புடன் ஊருக்குச் சென்று பயிர்வேலைகளை எஜமானர் ஏவியபடி செய்வர். புலைச்சியர் காலையி லெழுந்து தங்கள் தங்கள் வீட்டுவேலைகளைச் செய்து முடித்து யாமத்துக்கெல்லாம், மட் குடுவைகளில் பழையது கொண்டுவந்து தத்தம் புருடர்களின் பசியாற்றி நடவு அறுப்பு முதலிய வேலைகளை உடனிருந்து செய்வர். இவ்வாறு ஆண்டைமார்கள் இட்ட வேலை செய்து, வார்த்த கஞ்சி குடித்து, சேரி மக்களெல்லாம் ஊராரிடம் ஒற்றுமை பத்திமையுடன் உழுது பயிர் செய்து வருவர்.

ஆதனூர் புலைப்பாடியிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஊரிலுள்ள யாதேனும் ஒரு குடும்பத்துக்கு அடிமைப்பட் டிருந்தது. பறையர்களுக் குள்ளேயும் சாம்பான், தாங்கலான், மலத்தான், அப்பன் என்னும் உட்பிரிவுகள் உண்டு. இப்பிரிவுகளுக்குள் ஒன்றுக்கொன்று கொடுப்பனை கொள்வனை கிடையாது. இவைகளில் சாம்பான் பகுதியே சாலச் சிறந்தது. அம் முதற் பிரிவினைச் சேர்ந்த குடும்பத்தார் இரண்டொருவர் இச் சேரியிலும் உண்டு. அத்தகைய குடும்பத்திற் சேர்ந்த பறையன் ஒருவன் ஆதனூர் அந்தணர் ஒருவருக்கு வழிவழி அடிமைப்பட் டிருந்தான். அவனும் அவன் மனைவியும் ஐயர் மானியத்தைத் தங்கள் மானியமாக மதித்து, பண்ணை வேலையின் பார்ப்பனரை எதிர் பாராமல் ஏவாமக்களாய் உள்ள



வேலைகளைச் செய்து முடித்துக் களம் புலங்களைக் கணக்காய்ப் பெற்று, "பறைவேலை அரைவேலை" 'அறுப்பு அறுத்தாப் போலே ஆண்டை குடி கெட்டாப்போலே' என்னும் வழக்கச் சொற்களுக்கு இலக்காகாமல், 'ஐயரே ஐயர், அடிமையே அடிமை' என்று ஊரும் சேரியும் ஒக்க மெச்சும்படி வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குத் தம தாண்டையால் யாதொரு குறைபாடு நேர்ந்ததில்லையாயினும், ஆண்டவன் வைத்த அருங் குறை யொன்றுண்டு. அவர்களுக்குப் பலவருடங்களாகப் புத்திரப்பேறில்லை. அது பெறும் பொருட்டு அவர்கள் ஆதி பகவனை வேண்டிக்கொள்ளாத வேளையில்லை. நோன்புகளும் பல புரிந்தனர். மூன்று வேளைகளிலும் முத்தீசன் கோயிலுக் கெதிரில் நின்று தங்கள் குறையை முக்காலும் விண்ணப்பித்துக்கொள்வர். இவ்வாறு நிகழுங் காலத்தில் இவர்கள் செய்த நோன்பின் பயனாகவும், இனத்தார் செய்த புண்ணியத்தின் பயனாகவும், அந்தணரடிமைக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிள்ளை யென்றபோதே பெற்ற தாயுந் தகப்பனும் தங்களை யறியா மகிழ்ச்சிகொண்டு, குழந்தைக்குக் குல ஒழுக்கத்தின் முறைப்படி அவ்வப்போது செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து, அதை மிகப் பாராட்டி வளர்த்து வந்தனர். அந்தணரும் அதன் க்ஷேமத்தை அடிக்கடி உசாவிக்கொண்டு வந்தார். அக் குழந்தை நோய் நொடியற்று நற்குணம் பெற்று நாளுக்கு நாள் நலம் பெற வளரக்கடவதாக வென்று வாழ்த்தி அவரே அதற்கு நந்தன் என்று நாமகரணமுஞ் செய்வித்தார்.

நந்தனார் குழந்தையா யிருக்கும்போதே அடிக்கடி அழுகிற வழக்கம் இல்லை. அழுகிற குழந்தையல்லவோ பால் குடிக்கும். தாயாரே பார்த்து வேளைக்கு வேளை பால் கொடுத்தால்தான் குழந்தை உண்ணும். பசியழை அதற்கில்லை. இதைப்பற்றித் தாயுந் தகப்பனும் பல நாள் பரிவெய்திய துண்டு. இவர்கள் பண்ணை வேலைக்குப் போகும்போது பாலகனையும் உடன்கொண்டு போவர். தூறல் துளியில் நனைந்தாலும், கட்டாந்தரையிற் கிடந்தாலும், வெயிலில் இருந்தாலும் எதற்கும் ஒரே படித்தாய் அழுகை கூச்சல் ஒன்று மின்றிக் குழந்தை இருந்த விடத்திலேயே கிடக்கும்.

'குழந்தையை வீட்டில் விட்டுப் போகிறோமே, எப்போது வந்து பால் கொடுப்போமோ, அதுவரையில் அது என்ன கதியாகிறது' என்கிற ஏக்கம் தாயாருக்கு எள்ளளவும் வேண்டியதில்லை. தாயார் வெளி வேலையி லிருந்து வந்து குழந்தைக்குப் பால் கொடுக்க எவ்வளவு நேரஞ் சென்றாலும் அதனிடம் இளைப்பு களைப்பு யாதொன்றும் காணப்படுவதில்லை. நந்தனார் சின்னஞ் சிறிய குழந்தையா யிருக்கும்போதே பாடலோசை, பஜனை யோசை, கோயில் மணியோசை முதலியன காதில் விழுந்தால், தாம் தாய்ப்பா லுண்ணினும் அதை அக்கணமே விட்டுக் கருத்தை அவற்றின்மேற் செலுத்திக் கண்களை மலர மலர விழித்து வானத்தை அண்ணாந்து பார்த்து ஆநந்த முகங் காட்டுவார். அடிக்கடி சாம்பற்றாளை சர்வாங்கமும் சாத்திக் கொள்வார். விபூதியைக் கண்டாலோ வேறென்ன செய்வார்? உடம்பெல்லாம்



விபூதிமயமே! விபூதி யணிந் திருக்கும் எவரைக் கண்டாலும் குழந்தைக்குச் சிரிப்புங் களிப்பும் அப்போது தான். 'விபூதிபூசி வாரானா குழந்தை எழுந்து சிரிக்கானா', என்றெண்ணுவார் பெற்றோர். பேசாதிருப்பது பெரியோர்க்கழகு, சிறு குழந்தைக்கும் அதுவே அழகென்பான் அந்தணன்.

## 2. சிறு பிள்ளை

### நட்புந் தயையும் பிறவிக்குணம்

இவ்வாறு நந்தனார் சிறுவயதிலிருந்தே சிவபிரான் பால் செலுத்திய பத்தியிலேயே வளர்ந்து ஏழெட்டு வயதுப் பிள்ளையாயினார். ஒருநாள் தாயுந் தகப்பனுங் கள மேட்டில் நெல் ஒப்படி செய்து காயப் போட்டுத் திராவிக்கொண்டு காவல் காத்திருந்தனர். அந்தணர் அகத்திற்குச் சென்று அன்னமுண்டு திரும்பிக் களத்துக்கு வந்தார். அப்போது வேலை யொழிவா யிருக்க மூவரும் ஏதேதோ பயிர் விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் பண்ணையாள் அந்தணரிடம் ஒரு விண்ணப்பஞ் செய்யலானான்.

அடிமை — சுவாமி! பையன் வீணாப் ஆடிக் கெட்டுப் போகின்றானே, அவனை ஊரான் மேய்க்கவிடலாமென் றிருக்கின்றேன்.

அந்தணன் — அடே! என்னடா பயித்திக்காரப் பயல், அவன் உனக்குப் பிறக்கிற பையனா! சிறிது தவக் குறைவால் பறைச் சேரியில் பிறந்துவிட்டான்.

அவன் என்ன அறியாப் பிள்ளை யாயிற்றே! அவனை இதற்குள்ளாக மாட்டுமந்தையில் மடக்கிப் போட்டு மல்லாட வைக்கின்றேன் என்கிறாயே; சீச்சீ! இருக்கட்டும் பார்க்கலாம்.

அடி. — என்ன சுவாமி! முளைத்து மூன்றிலை விடவில்லை, இதற்குள்ளே என்னென்னமோ ஆட்டமெல்லாம் ஆடுகின்றான், கற்ற கதை யெல்லாம் பேசுகின்றான்; என்ன சுவாமி! பார்க்கலா மென்கிறீர்கள்.

அங். — அதன்றாடா, சிற்சில பிள்ளைகள் வயதுக்கு மிஞ்சி யிருப்பது வழக்கந்தான். அவனுக்கு நல்வினைப் பயன் ஏதோ புண்ணிய வசத்தால் சிறிது புதுமையாக அமைந்திருக்கிறது ஆண்டவன் செயல். அதனை யறியாமல் மடத்தனமாய்ப் பேசுகின்றாய்; வேண்டாம், வேண்டாம், அவனுக்கு இன்னும் வயதாகட்டும்.

அடி. — என்ன சுவாமி! அப்படிச் சொல்லுகிறீர்கள், முட்டாள் பையன்களெல்லாம் அவனுடன் கூடுகிறார்கள். இந்தச் சாம்பற் பையன் அவர்களை யெல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு எப்போ பார்த்தாலும் என்னென்னமோ பேசிக் கொண்டும், கண்ட விடங்களெல்லாம் திரிந்து கொண்டும் காலத்தைக் கழிக்கின்றான். வீட்டுக்கும் வேளைக்கு வருகிறதில்லை; இரவென்று மில்லை, பகலென்றுமில்லை; இவனைத் தேடிப் பிடிக்கிறது மூன்றாங் கட்டுக்கு வருகிறது. அவனை மாடு மேய்க்கத்தான் போட்டு விடவேண்டும் சுவாமி.



அங். — அடே! நான் சொல்வதைக் கேள்: பையன் புத்திசாலி, பத்தியுள்ளவன். ஏதோ சிலநாளைக்கு அவனிஷ்டப்படி நடக்கட்டும். பிடிவாதம் பண்ணாதே, என் பேச்சைத் தடுக்காதே.

அடி. — என்ன சுவாமி! அப்படியே சொல்லுகிறீர்கள், நம்முடைய பசுமாடுகள் நல்ல பையன் இல்லாமல் நாலா வழியும் நாலாய் விடுகிறது. அந்த வயிற்றுப் பையன் மாட்டை என்ன சரியாய் மேய்க்கிறானே! குளிப்பாட்டுகிறானே! நன்றாய்க் கட்டுகிறானே! வைக்கோல் போடுகிறானே! தினம் தினம் என் தாலி யறுந்து போகிறது! 'பார்ப்பாத்தி யம்மா மாடு வந்தது, பார்த்துக் கட்டிக்கொள்,' என்று போய் விடுகின்றான்: எத்தனை நாளைக்கு அவனோடு மல்லுக் கொடுக்கிறது! நமது பையன் என்றால் அடிப்பேன், பிடிப்பேன், ஆக்கினைக்கு உட்படுவான்; மாடுகளும் செவ்வைப் பட்டுப் போகும். என்ன சுவாமி! உமது கால் இருக்கிறது, என் தலை இருக்கிறது; எங்களுக்கு என்ன குறைவு! இங்கேயே பிழைத்துப் போவான், அவனும் திருந்தி விடுவான். அவன் நமது மாட்டை மேய்க்கட்டும், சுவாமி!

அங். — என்னடா! மடக்கி மடக்கிப் பேசுகின்றாய்! அவன் மாத்திரம் மாட்டைச் சரியாய் மேய்ப்பானென்று எண்ணுகிறாயோ? அப்போதும் இந்தக் கோலந்தான் பண்ணப் போகின்றான்! இருக்கட்டும் புத்தி வரட்டும் என்றால் நீ கேட்கவில்லையே, போடா போ! நீ எதாகிலும் செய்துகொள், என்னைக் கேட்கவேண்டாம்.

அடி.— என்ன சுவாமி! கோபித்துக்கொள்கிறீர்கள்; சுவாமி! கும்பிடுகின்றேன், என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?

அங்.— நான் என்ன செய்யச் சொல்லுகின்றேன், வயதாகட்டும், யோசித்துப் பார்க்கலாமென்கின்றேனே!

அடி.— சுவாமி! என்ன சொன்னாலும் உங்களுக்குக் கோபம் வருகிறது, நான் என்ன செய்யட்டும்; அப்படியே செய்யுங்கள், மாடுகள் எக்கேடாகிலும் கெட்டுப் போகட்டும்!

அங்.— அதன்றடா, எனக்கது தெரியாதா? என்ன முட்டாள் பேச்சுப் பேசுகிறாயே!

அடி.— சுவாமி, சரிதான், அப்படியே செய்கின்றேன்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு மாட்டுக்காரப் பையன் ஓடிவந்து "அண்ணா! அண்ணா! பார்த்தீர்களா உங்கள் பையனை! நான் மாடு மேய்த்துக்கொண்டிருந்தால் என் கைக்கோலைப் பிடுங்கிக்கொண்டு என்னை அடிக்கவந்தான், நான் ஓடி வந்துவிட்டேன். அவனைப் பார்க்கும்போதே எனக்குப் பயமாக இருக்கிறது," என்று அழுதுகொண்டே வாய் குழறிச் சொன்னான்.

அடி.— பார்த்தீர்களா, சுவாமி! அவன் வேலையை! யோசித்துப் பார்க்கலாமென்கிறீர்களே!

அங்.— அடே! பையா! உன்னை ஏண்டா அடித்தான் அவன், உண்மையைச் சொல்.



பையன்— பசுமாடு பயிரை மேய்ந்தது, நான் அதை அடித்தேன், அவன் எங்கேயோ இருந்து தி[illegible]ரென்று வந்து என் கோலைப் பிடுங்கி அடிக்க வந்தான்.

அங்.— அடிக்கவில்லையே? ஏண்டா அப்படி அழுகிறாய்?

பையன்— அவனைப் பார்த்தால் எனக்கு வயிறு கலங்குகிறது!

அங்.— நீ பசுவை நல்ல அடி அடித்திருப்பாய், அவன் உன்னை அடிக்கவந்தான். அதற்காக ஏன் அழுகிறாய்? போ, இனிமேல் மாட்டை அப்படி அடிக்காதே, நான் அவனை விசாரிக்கிறேன்.

அடி.— அவன் மாட்டை அவன் அடித்துக் கொண்டால் இவனுக்கென்ன, சுவாமி?

அங்.— போடா போ! முட்டாளே உனக்குத் தெரிந்தது இவ்வளவுதான், யார்தான் ஆகட்டும் பசுமாட்டை அடிக்கலாமோடா? அது பாவமல்லவா?

அடி.— அம்மாட்டுப் பையனுக்குப் பாவமென்ன, புண்ணியமென்ன, சுவாமி! தினம் இப்படித்தானே ஊர்ச் சண்டையை உள்ளுக் கழைத்துக்கொண்டு வந்துவிடுகின்றான், அவனுடைய போராட்டம் பொறுக்க முடியவில்லை. மாடு மேய்க்கப் போட்டுவிடுங்களென்றால் நீங்கள் என்மீது எரிந்து விழுகின்றீர்கள்!

அங். — அது அப்படி யல்லடா, நான் சொல்லுகிறதைக்கேள் : அவனை என்னிடம் இட்டுக்கொண்டு வா, தக்க புத்தி சொல்லுகிறேன்.

அடி. — சரி, ஆகட்டும் சுவாமி!

அங். — நான் அகத்துக்குப் போகிறேன், இந்த நெல்லை வாரி அம்பாரம் போட்டுக் குறி வார்த்து முத்திரை வைத்துத் தாளிட்டு மூடிவை, நான் இதோ வந்து விடுகின்றேன்.

ஆதனூரில் வேளாளர் ஒருவர் தெருப் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டு இருந்தார். அவரிடம் ஊர்ப் பிள்ளைகளெல்லாம் கல்வி பயின்று வந்தனர். அவர் கிராமத்தில் மதிப்பும் மரியாதையும் பெற்றவர். சாந்தம், தயை, ஆன்றோர் வழிபாடு முதலிய நற்குணங்கள் அமைந்தவர். யாவரிடத்திலும் நட்புக் குணம் பாராட்டுபவர். ஆதனூரார் யாவரும் அடிக்கடி அவரிடஞ் சென்று அளவளாவிப் பேசிக்கொண்டிருப்பர். நமது அந்தணரும் அவ்வாறு செய்வதுண்டு. அந்தணர் களமேட்டை விட்டுப் போகும் வழியில் அவர் பிள்ளைகளோடு தமது தெருத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருக்கக் கண்டு அவரிடஞ் சென்றார்.

முதலியார் — சுவாமி! வாருங்கள், நமஸ்காரம்.

அங். — மகராஜனாயிரும்.

முத. — ஏது, இவ்வளவு தூரம்.

அங். — விசேஷம் ஒன்றுமில்லை, களமேட்டிலிருந்து வீட்டுக்குப் போகின்றேன்; தங்களைப் பார்த்



தேன் : சிறிதுபோது வார்த்தையாடிப் போகலாமென்று திரும்பினேன்.

முத. — சேரிப் பையன் நந்தன் உமது அடிமை மைந்தனோ.

அங். — ஆம், அவனுக்கென்ன?

முத. — அவன் மற்றைப் பையன்களைச் சேர்த்துக் கூட்டங் கூட்டி வாட்டஞ் சாட்டம் பேசுகின்றானாமே! கோயில் என்கின்றானாம், குளம் என்கின்றானாம், கோபுரம் என்கின்றானாம், என்ன அதிசயமிது! கலிகாலக் கொள்ளையோ! அவன்தானோ?

அங். — ஆமாம், ஐயா! அவன்தான் என் அடிமை மைந்தன். அவன் செய்கை என்ன உமக்கு அற்புதமாகத் தோன்றுகின்றதோ?

முத — அற்புத மல்லவோ இது? சேரிப் பையன் என்ன! அதிலும் சிறு பையன் என்ன! நீறணிந்து கொள்கிறதாம்! நிமலன் விஷயத்தைப் பேசுகிறதாம்! அமலன் கோயிலண்டை சென்று அம்பலக் கூத்தாடுகிறதாம்! உமக்கு ஆச்சரியமாகக் காணவில்லையோ?

அங். — இதென்ன ஆச்சரியம், பிறந்த போதே பிஞ்ஞகனைப் பாடவில்லையா! மூன்று வயதில் முக்கண்ணனைத் துதிக்கவில்லையா! உலகத்தில் எவ்வளவோ நடக்கின்றது.

முத — சேரிப் பிள்ளைகளா அப்படி இருக்கும்!

அந். — பறைப்பிள்ளை யானாலென்ன! பார்ப்பாரப் பிள்ளை யானாலென்ன! அவன் அருள் யாவருக்கும் பொதுவன்றோ!

முத. — ஜாதிபேதத்தைக் கற்பித்துவைத்த அந்தணர்களே இவ்வாறு பேசினால் மற்றவர்களுக்கென்ன! நந்தன் மீது ஏது உமக்கு இவ்வளவு அன்பு? காயா மரமும் காய்த்ததே!

அந். — நீர் என்னமோ நினைக்கின்றீர், பின்னால் வரப்போகிறது உமக்குத் தெரியாது. ஜாதிக் கட்டுப்பாடு விட்டுப் போகப் போகின்றது பாரும் இன்னும் சிறிது காலந்தான், நாமென்னமோ பார்க்க மாட்டோம், நமது பேரன்மார் நேருக்கு நேராய்க் காணப் போகின்றார்கள்.

ஒருபையன் — ஐயா! நேற்று மத்தியானம் ஒரு பறைப்பையன் அதோ எதிரேயிருக்கும் வேம்பின்கீழ் உட்கார்ந்துகொண்டு எங்களையே பார்த்துக்கொண் டிருந்தான். அவன் அந்தப் பையனாக இருக்கலாம்.

அந். — கேட்டீரோ முதலியாரே! அவன் ஏதோ தாங்கள் சொல்வதையும், பிள்ளைகள் படிக்கிறதையும் கேட்க வந்தான்போ லிருக்கிறது. அவன் அந்த நந்தனாகத்தான் இருக்கவேண்டும்.

முத. — என்னமோ, நான் கவனிக்கவில்லை. சுவாமி, போய்வருகிறீரா? நமஸ்காரம்.

அந். — போய் வருகிறேன்.



அந்தணர் முதலியாரிடம் பேசிவிட்டு அகத்துக்கேகி அன்ன மருந்திக் களமேடு சேர்ந்தார். அடிமையும் வீட்டுக்குச் சென்று இருந்ததை யுண்டு நந்தனாரைக் கூட அழைத்துக் கொண்டு அய்யரிடம் சேர்ந்தான்.

அந். — நந்தா! என்ன சங்கதி, காலையில் அந்தப் பையனை அடிக்கப் போனாயாமே?

நந்தனார். — நான் ஏரிக்கரைமேல் நின்றுகொண்டிருந்தேன். கரையின்கீழ் அந்தப் பையன் கோலி விளையாடிக்கொண் டிருந்தான். அப்போது அந்தப் பசு பக்கத்திலிருந்த பயிரில் இறங்கிற்று; இவன் உடனே ஓடி அதைப் போடுபோடென்று ஒரு பருத்த கோலால் ஓச்சிஓச்சிப் பலதரம் முதுகின் மேலேயே புடைத்தான். இவன் பசுவைக் கவனமாய்ப் பார்த்து மேய்க்காமல் அதைப் பயிரில் போகும்படி விட்டு விட்டுத் தானே சென்று அதை அப்படி அடித்தபடியால் நான் உடனே விரைந்து அக் கோலைப் பிடுங்கிக் கொண்டு கோபத்தோடு அவன் முன் நின்றேன். அவன் ஓடி வந்துவிட்டான். இதுதான் நடந்தது.

அந். — பார்த்தாயா பண்ணைக் காரா! பையன்மீது வீண்பழி சுமத்தினாயே! நந்தா! உன் தகப்பன் விரும்புகிறபடி மாடு மேய்க்கிறாயா?

நந். — அப்படியே செய்கிறேன், ஆண்டையே!

அந். — அடே உனக்கு வயது வரவில்லை, அறியாப் பிள்ளை, வருகிற வருஷம் அப்படியே செய்,

போ, தகப்பன் சொற்படி கேட்டுக்கொண்டிரு; என்னிடமும் அடிக்கடி வந்துபோ.

அதுமுதல் நந்தனார் அதிகாலையில் எழுந்து முழுகிக் குளித்து ஆடையைத் தோய்த்து உலர்த்திக் கட்டிக்கொண்டு, அன்னமிட்டதை யுண்டு வெளியில் போய் விடுவார். ஆதனூரிலும் அக்கம் பக்கம் கிராமங்களிலுமுள்ள கோயில் கோபுர வாயிலுக் கெதிரில் நின்று கும்பிட்டுக் கூத்தாடிப் பரமனைப் பாடி ஆனந்தம் கொண்டு அசைவற்று நிற்பார். மந்தை வெளிகளுக்குச் சென்று மாட்டுக்காரப் பையன்களைச் சேர்த்துத் தமக்குத் தோன்றியவைகளைச் சொல்லிக்கொண் டிருப்பார். எந்தத் தெருத் திண்ணையிலாவது புராண சாத்திரங்கள் பேசப்படக் கண்டால் அந்தத் தெருவில் மறைவில் இருந்துகொண்டு அவற்றை உற்றுக் கேட்டுக்கொண் டிருப்பார். திருநீறு அக்கமணி இவைகளைத் தரித்தவர் எவரையேனும் கண்டால் அவர் காலில் விழுந் தெழுந்து கும்பிடுவார். ஒவ்வோர் நாளில் ஆதனூர் முதலியார் பள்ளிக்கூடத்தண்டை போய் ஓர் மரத்தடியி லுட்கார்ந்துகொண்டு முதலியார் சொல்வதையும் பிள்ளைகள் படிப்பதையும் மிக ஆவலுடன் கவனித்துக் கேட்பார். ஒருநாள் முதலியார் இவனைக் கிட்ட அழைத்து, "அப்பா, நந்தா! சேரிப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு என்னென்னமோ சொல்லுகிறாயாமே, என்ன அது?"

நந். — ஐயா! நான் அவர்களுக்கு கோயிலுக்குப் போவது நன்று, குளத்தில் முழுகுவது நன்று, கோபுரம் பார்ப்பது மிகவும் நன்று - என்று சொல்லுவது வழக்கம்.



முத. — அது ஏன் அப்படிச் சொல்கிறாய்?

நந். — என் வாயில் வந்ததை வாலிபர்க்குச் சொல்கிறேன்.

முத. — நீ ஏன் அடிக்கடி இங்கே வந்து மரத்தின் கீழ் உட்கார்ந்துகொண் டிருக்கின்றாய்?

நந். — ஏதோ தாங்கள் சொல்வதையும் பிள்ளைகள் படிப்பதையும் கேட்கலா மென்று வருகின்றேன்.

முத. — ஏன் உனக்கு வயதாய் விட்டதே, அய்யர் வீட்டு மாட்டை மேய்க்கக் கூடாதா?

நந். — ஐயர், "வேண்டாம், இன்னும் வயதாகட்டும்" என்று சொல்லிவிட்டார்.

முத. — உன்மேல் ஐயருக்கு அதிக அன்புபோல் காணப்படுகின்றது; நல்லது, போ.

இரண்டொரு தினம் கழித்து நந்தனார் பள்ளிக்கூடத்தண்டை வந்தார். அன்று முதலியார் ஏதோ வேலையாய் வெளியில் போனவர் வெகுநேரம் வரையில் வரவில்லை. அப்போது பிள்ளைகளெல்லாம் தெருவில் வந்து நந்தனாரைச் சூழ்ந்து கொண்டு, "நந்தா, சேரியில் என்னென்னமோ சொல்லுகிறாயாமே, அதை எங்களிடத்திலும் சொல்லேன், பார்ப்போம்," என்றார்கள். அதற்கு நந்தனார், "ஆண்டைமாரே! நீங்களெல்லாம் உயர் குடியிற் பிறந்த

மக்கள். உங்களுக்கு நான் என்ன சொல்லப் போகின்றேன்,'' என்றார். பிள்ளைகள், "பரவாயில்லை, தெரிந்ததைச் சொல்,'' என்று சொல்லி யாவரும் அவரைச் சுற்றிக்கொண்டு வற்புறுத்தினர். பிள்ளைகள் விடமாட்டார்கள், ஏதோ ஒன்றைச் சொல்லித் தான் தீரவேண்டுமென்று நந்தனார் சொல்ல ஆரம்பித்து,—

வைகறை யெழுந்து ஐயனைத் துதியும்
துதித்துச் சுவடி படிக்க வேண்டும்
படித்துக் கடன்கள் முடிக்க வேண்டும்
முடித்துக் குரவரைத் தொழுதல் வேண்டும்
தொழுது இட்டதை உண்ணல் வேண்டும்
உண்டு பள்ளிக்குப் போதல் வேண்டும்
பள்ளிக் கேகிப் படித்தல் வேண்டும்
படித்துப் பண்பாய் அமர்தல் வேண்டும்
கற்றதை மறவாது காத்தல் வேண்டும்
காத்து மேல் மேல் கற்றல் வேண்டும்
கற்று அதன்படி நிற்றல் வேண்டும்
நின்று நிமலனை என்றும் போற்றுக
போற்றிப் போற்றி யேத்துக மேலாய்—அவனை
ஏத்தி ஏத்தி இருத்துக மனத்தில்
மனத்திற் கொண்டு கனத்தைச் செய்க
கனத்தைச் செய்து குணத்தைப் பெறுக
குணக்குன் றேறி இணக்கம் பெறுக
இணக்கம் வணக்கம் எல்லாம் பெறுக
வணங்கிக் கோயிலை வலமே வருக
வலமே வந்து வாயில் நிற்க
வாயிற் கோபுரம் வணங்கி நிற்க
கோபுரம் கண்டு குழைந்து நிற்க
கோபுர தரிசனம்! கோபுர தரிசனம்!
கோபுர தரிசனம் கொடுக்கும் அனைத்தும்.



ஒரு பையன் — அடே! வாத்தியார்! வாத்தியார்! முதலியார் வரவே பிள்ளைகள் எல்லாம் ஓடித் தத்தம் இடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசாமல் இருந்தனர். நந்தனும் சொல்வதை நிறுத்தி விட்டான்.

முதலியார் — என்னடா! கூட்டங் கூடிப் பேசிக் கொண் டிருக்கிறீர்கள்!

ஒருபையன். — நந்தன் சொன்னதைக் கேட்டுக்கொண் டிருந்தோம்.

முத. — சேரிக் கூட்டத்தை ஊரிலும் வைத்து விட்டானே!

பை. — நாங்களே ஏதாவது சொல்லென்று கேட்டோம், அதற்குமேல் அவன் ஏதேதோ சொன்னான்.

முத. — நந்தன் என்ன சொன்னான்?

பை. — "கோபுர தரிசனம் கொடுக்கும் அனைத்தும்" என்று சொன்னான்.

முத. — நந்தா! இங்கேவா, கோபுர தரிசனம் என்னென்ன கொடுக்கும்?

நந். — இகம் பரம் எல்லாம் கொடுக்கும்.

முத. — இவைகளெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?

நந். — வாயில் வந்ததைச் சொல்லுகின்றேன்.

முத. — சரி, போ.

## 3. மாட்டுக்காரப் பையன்.

### இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன்கோயில்

இவ்வாறு நந்தனார் இரண்டு மூன்று வருட காலம் கேட்டதைக் கேட்டபடி யுணர்ந்து கேள்விச் செல்வத்தில் மிக்கவராய்ச் சிவபத்தியிற் சிறந்து விளங்கினார். ஒருநாள் அடிமையாள் அந்தணரை அணுகி, "சுவாமி, ஆண்டே! எனக்கு வயது தளர்ந்து விட்டது, வேலை செய்ய முடியவில்லை. பையன் பண்ணை வேலையில் இருந்தால் எனக்குப் பலவிதத்திலும் உதவியா யிருப்பான்; ஆண்டை வேலைக்கும் அட்டி இராது. அவனும் சீர்ப்பட்டுப் போய்விடுவான். ஐயே! எனக்கு ஊர் நிந்தை பெரிதாக இருக்கின்றது. நந்தனால் நத்தம் பாழடைந்து போகின்றதென்று ஊரும்சேரியும் ஒன்றாய்ச் சேர்ந்து என்னைப் பிழைக்க விடவில்லை. கழனி வேலை பார்ப்பேனா, கேட்டவர்களுக்குச் சமாதானஞ் சொல்வேனா! ஆண்டே! அவனை வேலையில் அமர்த்திக் கொண்டால் எல்லாவற்றிற்கும் ஒரே முழுக்காய்ப் போய்விடும். என்ன சொல்கிறீர்?" என்று மனக்கவலையுடன் சொல்ல, அந்தணார் அடிமையை நோக்கி, "என்னடா! உன் போராட்டமும் ஊர்ப் போராட்டமும் பெரிதாய் விட்டது எனக்கு! பிள்ளைகளைச் சேர்த்து நல்விஷயங்கள் நவின்றால் நாற்றமெடுத்துப் போகின்றதாமே ஊருஞ் சேரியும்! அத்தகைய பிள்ளை அகப்படுமா உனக்கு! ஊராருக்குத்தான் அது கிடைக்குமா! பார்த்தால் பசியாறிப் போகுமே, கண்டால் கலிதீர்ந்துவிடுமே அவன் ஏதோ முன் செய்த சிறிது புண்ணியத்தால்



இந்நிலையில் நிற்கின்றான். அதை யறியாமல் நீ அல்லற் படுகின்றாய். சரி, இருக்கட்டும்; நாளை அவனை என்னிடம் அழைத்துக் கொண்டுவா; என்ன சொல்கின்றான் பார்ப்போம்," என்று சொல்லி, அடிமையை வேலையின்மேல் அனுப்பிவிட்டார்.

மறுநாள் அடிமையாள் மைந்தனை யழைத்துக் கொண்டு அந்தணரிடம் வந்தான்.

அந்தணர் - அப்பா நந்தா! உன் தகப்பனுக்கு ஆள் வேலை செய்ய !முடியவில்லையாமே; அவன் வேலையை நீ பார்த்துக்கொள்வாயா?

நந்தனார் - சுவாமி! என்னால் கூடிய வேலையைச் செய்வதற்கு அட்டி என்ன இருக்கின்றது! பெற்றவர் விருப்பத்தை நிறைவேற்றுவதைவிட மற்றென்ன வேலை எனக்கு!

அந். — பண்ணை வேலையில் எண்ணம் வைத்துச் சொன்னபடி நடந்து கொள்வாயா?

நந். — அதற்கென்ன தடை, ஆண்டான் அடிமை பண்றோபான்?

அந். — நீ எப்படிச் செய்யப் போகின்றாய்? கோயில் குளமே கதியாயிருக்கின்றாயே! ஊர்ப் பிள்ளைகளை எல்லாம் கூட்டங் கூட்டுவதிலும், அவர்களுக்கு ஏதேதோ எடுத்துச் சொல்வதிலும், அவர்களை அழைத்துக்கொண்டு எங்கே புராணம், எங்கே பிரசங்கம், எங்கே உற்சவம், எந்த மூலையில் விபூதி பூசியும் காவி கட்டியும் இருக்கின்றார்கள் என்று திரிவதிலும் கண்ணுங்

கருத்துமா யிருக்கின்றாயே! நீதானா பண்ணை வேலையில் பொருந்தி பயிர் செய்யப் போகின்றாய்! நீ சொல்வதை நான் சிறிதும் நம்பக்கூடவில்லை.

நந். — சுவாமி! அவைகளால் ஏதாவது குற்றங் குறையுண்டோ? அந்தணராகிய நீரே அவ்வாறு இயம்பினால் மற்றை மாந்தர்கள் சொல்வதற்குக் கேட்கவேண்டுமோ!

அந். — அதன்றுடா, அவாளவாள் பிள்ளைகளுக்கு வேலையில்லையோ! உன்னுடன் அவர்கள் திரிந்து கொண்டிருந்தால் அவர்கள் வீட்டுப் பிழைப்பு எப்படி நடக்கும்? சேரிப் பிள்ளைகள் ஊரில் மாடு மேய்த்து ஏதோ சிறிது தானியம் கொண்டு போனால்தானே தாய் தகப்பன்மாருக்கு உதவியாக இருக்கும்? உன்னுடைய நல்ல காலம் நான்தான் உங்களப்பனிடத்தில் சிறிது அன்பு வைத்து நடந்து கொள்கிறேன், அவனும் ஆளாயிருக்கின்றான், நீயும் உண்டுடுத்து ஊர் திரிகின்றாய்; ஊரில் எல்லா ஆண்டைமாரும் அப்படியே இருப்பார்களா?

நந். — சுவாமி! தாங்கள் ஏதாவது எனக்கு வேலையிட்டு அதைச் செய்வதினின்றும் தவறினேனா? இப்போது எனக்கு ஆண்டவன் விதித்த கடமையென்று எது என் மனத்திற் பட்டதோ அதை நான் செய்துகொண்டிருக்கின்றேன். அவனுக்குத் தொண்டு செய்வதற்கன்றோ நாமெல்லோரும் இங்குப் பிறந்திருக்கின்றோம்?



அந். — அறியாப் பிள்ளைகளைக் கெடுப்பதுதான் ஆண்டவனுக்குச் செய்யும் பணியோ?

நந். — சுவாமி! நான் அவர்களை வீடுபுகுந்து இழுத்துக்கொண்டு வந்து விடுகின்றேனா? மந்தை வெளியிற் சென்று நான் எனக்குத் தோன்றியதை அவர்களுக்குச் சொல்கின்றேன்.

அந். — இதுதானோ ஆண்டவன் உனக்கிட்ட கட்டளை?

நந். — என் புத்தியிற் பட்டது அது. உயிர்களின் நன்மையைக் கோரி அதற்கேற்றபடி நடப்பதே அவன் கருத்தை நிறைவேற்றியதாகும்.

அந். — ஆண்டவன் கருத்துக் கிசைந்திருக்கின்றவன் ஆண்டைக் கருத்துக் கிசைவாயோ?

நந். — உலகமெல்லாம் அவன் மயமன்றோ! தங்கள், கட்டளையையும் என் தலைமேற் கொண்டு செய்யக் காத்திருக்கிறேன்.

அந். — அப்படியானால் நாளை முதல் நமது கன்றுகாலிகளை மேய்த்துக் கொண்டு வர என்னிடம் அமர்ந்துவிடு; கிழவனும் நிம்மதியாயிருப்பான்.

நந். — அப்படியே ஆண்டே.

மறுநாள் தொட்டு நந்தனார் மாட்டுக்காரப் பையனானார். அஃறிணை உயிர்கட்குள்ளே ஆவினங்கள் சிறந்தவையென்றும், அவைகள் சிவபெருமான் திருமுடிக்குத் திருமஞ்சனம் ஐந்தும் அளிப்பவையென்றும், அவைகளே அச் சிவபெருமானும் சிவனடியார்களும் அணியும் திருநீற்றுக்கு மூலமாவனவென்றும்,

மேலும் அவர் ஏறி நடத்தும் இடபத்தின் குலமே இவைக ளென்றும் மனத்திற் கொண்டவராய் நந்தனார், கயிறும் கோலும் கையிற் கொண்டு, வைகறையில் சேரியினின்றும் புறப்பட்டு அந்தணர்தம் ஆவின் சாலையை யடைந்து, கோசல கோமயங்களை நீக்கி அதைச் சுத்திசெய்து, கன்று காலிகளை மெல்லென ஆவுரிஞ்சுகல் அமைக்கப்பெற்ற மந்தைவெளிக்கு ஓட்டிக்கொண்டுபோய் நிறுத்திப் பிறகு புல்லுள்ள இடங்களைத் தேடிக் கொண்டுபோய் வயிறார மேய்த்தும், தண்ணீர் கண்டு காட்டியுங் குளிப்பாட்டியும், உச்சி வேளைகளில் சோலைகளின்கண் நிறுத்தியும், பொழுதுபடுஞ் சமய மணுகப் பெற்றங்களை யோட்டிக் கொண்டு போய்க் கொட்டத்தில் விட்டு, அவைகள் ஒவ்வொன்றையும் அதனத னிடத்திற் கட்டி வைக்கோற் போட்டுவிட்டு, அந்தணரிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு செல்வார். ஆனிலையை அவ்வப்போது ஆற்று மண்கொண்டு பரப்பிப் பக்குவம் பண்ணுவார். பசுமாடுகளுக்கு வேண்டிய கயிறு தும்புகளைத் தாமே திரித்துக் கொள்வார். இவ்வாறு நந்தனார் ஆனிரைக்கு ஒருவித அச்சமும் அணுகாமல் மேய்த்துக் காத்து வரக் கன்றுகள் பல்கிப் பசுக்கள் பன்மடங்கதிகம் பால் கறக்க, அந்தணராகிய ஆண்டையும் அகமகிழ்ந்தார். அடிமையாகிய தந்தையும் தன் மைந்தனைத் தனக்குள்ளே மெச்சிக்கொண்டான்.

ஒருநாள் அந்தணர் வயலி லிருக்கும்போது அவர் நண்பராகிய முதலியார் அங்குவர இருவரும் பல பேச்சுக்கள் பேசிக்கொண் டிருந்தனர். அச் சமயத்தில்,



முத. — சுவாமிகளே! எது அக்கம்பக்கம் கிராமங்களில் மாடுகளுக்கு நோய் பலமா யிருக்கின்றதாமே! இரவும் பகலும் இதுவே பெருங் கவலையா யிருக்கின்றதே.

அந். — ஆமாம், அப்படித்தான் நானுங் கேள்விப்படுகின்றேன். நந்தன் காதவழியிலுள்ள தன் மைத்துன னூருக்குக் கலியாணத்துக்குச் சென்றிருந்தானாம், வண்டியெருதுகளி லொன்று வழியிலேயே விழுந்து விட்டதாம்! திரும்புகாலில் கால்நடையாக வந்தானாமே!

முத. — என்ன போங்கள், இந்த மாட்டுக்காரப் பயல்கள் மாடுகளைச் செவ்வையாய் மேய்க்கிறதில்லை, கழுவுகிறதில்லை, தொழுவத்தைச் சீர்ப்படுத்துகிறதில்லை; சொன்னாலுங் கேட்கிறதில்லை, சொந்தபுத்திகொண்டும் பார்க்கிறதில்லை; பெரிய போராட்டமாய்ப் போய்விட்டது போங்கள்; இப்படியானால் மாடுகளுக்கு நோய் வாராம லிருக்குமா!

அந். — அது விஷயத்தில் இப்போது எனக்குக் கவலையில்லை. நந்தன் மாடுமேய்க்க ஆரம்பித்தது முதல் எனது கன்றுகாலிகள் செழுமையாகவே இருக்கின்றன. ஆனிரைகளின்மேல் அவனுக்கு அக்கறை இருக்கின்றது. கொட்டத்தை பெரு சுத்தமாய் வைத்திருக்கின்றான்.

முத. — அவன்தான் சேரியையே சுத்தமாக்கிவிட்டானாமே! அங்கு எச்சில் துப்பல் காணவே முடியா

தாமே! அசுத்தம் என்றால் அருவருக்கின்றானும், எறும்பைக் கொன்றாலும் எடுத்தெறிந்து பேசிவிடுகின்றானும், குளிக்காதவனைக் கண்டால் கோபிக்கின்றானும், அழுக்குத் துணிக்கு அஞ்சுகின்றானும், துடுக்குச் செயற்குத் தக்கின்றானும், விபூதியணியும்படிக்கும் வற்புறுத்துகின்றானுமே! மாட்டுக்காரப் பையன்களெல்லாம் நந்தனைக் கண்டால் நடுங்குகின்றார்களாம்; எந்த மாடும் மேய்ச்சற்காலிலேயே யிருக்கவேண்டுமாம், எந்த மாட்டையும் எவனும் தொடக்கூடாதாம், குளிப்பாட்டாத மாடு காணக்கூடாதாம், காலியைக் கடுக நடத்துதல் கூடாதாம், அவை வீட்டுக்குத் திரும்புபோது வயிறு புடைத்திருக்க வேண்டுமாம். மாட்டை வெயிலில் நிற்க வைத்துக்கொண் டிருந்தானென்று எங்கள் பையனை நேற்று நந்தன் அடிக்கவந்தானுமே, இதென்ன வேடிக்கையா யிருக்கிறதே!

அங். — முதலியாரே! இது வேடிக்கையோ! உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாம லிருப்பதும், ஊராரை நல்வழியில் நடத்துதலும் வேடிக்கையாகுமா? இவை பெரியோர் செய்கைகளன்றோ!

முத. — நந்தன் பெரியோனாய்விட்டானோ?

அங். — அதை நான் சொல்வானேன், நீரே சொல்கின்றீரே!

முத. — அதென்ன, பறைப்பையன்மேல் உமக்கு அவ்வளவு பிரீதி!



அங். — உம்முடைய மாட்டுக்காரன் ஆற்றுமண் தூக்கிக்கொண்டு வந்து ஆனிலையைச் சுத்தமாக்குகின்றானோ? மற்றை மாட்டுக்காரப் பையன்களை இவனே மேய்க்கிறானென்று நீரே ஒப்புக்கொள்கின்றீர். அவர்களுக் கென்ன, கன்றுகாலிகளைக் கருத்தாய் மேய்க்கா விட்டாலும், மிரட்டுவதிலும் துரத்துவதிலும் அடிப்பதிலும் புடைப்பதிலும் குறைவுண்டோ! அவைகளெல்லாம் நேரிடாதபடி நந்தன் அவர்களைச் செம்மைப் படுத்துகின்றானன்றோ? நந்தன் வழியில் அவர்கள் நடப்பார்களானால் நமதூரில் கால் நடைகளிடம் நோய் நொடிகள் காலடி வைக்குமா? ஏன், நந்தன்மீது உமக்கும் பிரீதிவிழ நியாயமில்லையோ? நீரயோசித்துப் பாரும், பறையன் என்பதைப் பாராட்டாமற் பாரும்.

முத. — சுவாமிகளே! ஏது என்னையே திருப்பிக் கொண்டீரே! குலத்துக் கேற்ற கொள்கை வேண்டுமல்லவோ? உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ!

அங். — ஓகோ! உமக்கும் எனக்குந்தான் உம்பர் உலகு கிட்டும்போ லிருக்கின்றது! பறையன் எப்படி யிருந்தாலும், படுவது நரகந்தானோ! அந்த எட்டைத் தள்ளும். குலத்தளவே யாகுமாம் குணம் — என்பது நமது நந்தனிடத்தில் பொன்றிப்போக வேண்டியதுதான். செய்வன திருந்தச் செய் — என்பதன்றோ அவன் கொள்கை? கடமையைச் செய்து முடிப்பவனுக்குக் கைலாயம் கையிலிருக்கிற தல்லவா?

முத. — எது இன்று வெட்டப் பூதம் புறப்பட்டது! இனி உம்மோடு பேச எனக்கு இயலாது — போய்வருகிறேன்.

அன்று பொழுது பட்டதும் ஐயர் அகத்துக்கேகினர். நந்தனார் பசுமாடுகளைக் கட்டி வைக்கோற் போட்டுத் தொழுவத்தைச் சாத்தித் தாளிட்டுச் சாவியை அந்தணர் கையில் கொடுக்க வந்தார்.

அந். — நந்தா! ஊர்த் தொல்லை உனக் கென்னத்திற்கு, எவன் மாடு எப்படிப் போய்விட்டாலும் உனக்கென்ன, எந்தப் பையன் எக்கேடு கெட்டாலும் உனக்கென்ன, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு நீ வந்துவிடுகிறதுதானே; மற்றை மாட்டுக்காரப் பையன்களைக் கண்ணில் காணவொட்டவில்லையாமே; அவர்களை அடிக்கிறாயாம், அதட்டுகிறாயாம், இதெல்லாம் என்ன வேலை?

நந். — சுவாமி, சேரிப் பிள்ளைகள் பசுமாடுகளைப் பக்குவமாய்ப் புல்லிருக்கு மிடந்தேடி மேயவிடாமல், அயலார் பயிர்களிற் போகவிட்டுக் கண்டபடியடித்தால் வாயில்லாச் சீவன்கள் என்ன செய்யும்! அவர்கள் அவைகளை அடிக்கும்போது எனக்குப் பார்க்கப் பிடிக்கவில்லை. நாள் முழுதும் தண்ணீர் காட்டாமலே தள்ளிவிடுகின்றார்கள். வாரத்துக்கொருதரமாயினும் மாடுகளைக் கழுவ வேண்டியதில்லையா? பசுக்களைப் பாதுகாவாவிட்டால் ஏருக்குத் தகுந்த எருதுகள் எங்கிருந்து கிடைக்கும்? மேலும் அவர்கள் ஆண்டை



மாரிடத்தில் அறிவாகப் படிவாங்கி அன்னம் புசித்து வயிறு வளர்க்கவில்லையா? அன்னமிட்ட வீட்டிற் கன்ன மிடலாமா? கடமையைச் செய்யாதவன் நற்கதி யடைவானா! உயிர்களின் மேல் அன்பின்மையும் உண்ட வீட்டுக் கிரண்டகமும் கூடாதென்றுதானே அப்பிள்ளைகட்கு உருட்டி மிரட்டிப் புத்தி சொல்லுகின்றேன். பூத்தது என்றால் காய்த்தது என்னும் இவ்வுலகம் புண்ணியச் செய்கையை எண்ணிப் பார்க்குமா! அடிமையின் செய்கை அடாததென்று தங்களுக்குத் தோன்றுகிறதா?

அந். — அதன்றடா, இவைகளெல்லாம் தப்பென்று நான் சொல்லவில்லை. ஊரில் ஏன் அப்படிப் பட்ட பேர் எடுக்கவேண்டும் நீ? நமக்கிருக்கும் வேலையை நாம் செய்துகொண்டால் போதாதா? இருக்கட்டும், சேரிக்குள்ளேயும் உனது ஆர்ப்பாட்டம் பெரிதாய் இருக்கின்றதாமே; அவாளவாள் வீட்டுக் காரியங்களை அவாளவாள் இஷ்டப்படி செய்துகொள்கிறார்கள்; குளிக்கவில்லை யென்கிறாயாம், முழுகவில்லை யென்கிறாயாம், நெற்றியில் நீறணியவில்லை யென்கின்றாயாமே! பறையர்கள் பார்த்ததைத் தின்பார்கள், கண்டதை யருந்துவார்கள், அவற்றை யெல்லாம் நீயேன் கண்டுகொள்கிறாய்? உனக் கிஷ்டமான படி நீ நடவேன்? பிறருடைய காரியங்களில் நீ ஏன் தலையிட்டுக்கொள்கின்றாய்? என்ன, நான் சொல்லுகிறது தெரிகிறதா?

நந். — என்ன, தாங்கள் அப்படிச் சொல்லிவிடுகின்றீர்களே! சேரியெல்லாம் நாற்றமெடுத்துப் போகின்றது! குளித்து முழுகிச் சுத்தியாயிருந்தால் கும்பிடப்போகும் தெய்வம் குறைந்தே வராதா! மேலும் புலையும் கொலையும் களவும் தவிர— என்றும், நீறில்லா நெற்றிபாழ் — என்றும் ஔவையார் சொல்லியிருக்கின்றாரே; இவைகளைக் கேட்டறிந்த நான் எப்படி அவ்வநீதங்களைக் கண்டு சகிப்பேன்! என் மனத்திற் பட்டதை இடித்திடித்துச் சொல்லாமலிருக்க என்றால் முடியவில்லையே! சேரி இப்போது எவ்வளவோ வழிக்கு வந்திருக்கின்றதே! அது தங்களுக்கும் திருப்திதானே?

அந். — எனக்கு அது ரொம்ப சந்தோஷமே. நீ ஊர்ப் பழிக்கு ஆளாய் விடுகின்றாயே என்பதன்றே எனக்கு இரவும் பகலும் கவலை! எப்படியோ, [illegible] விரோதம் வைத்துக் கொள்ளாதே — வீட்டுக்குப்போய் காலையில் வா, கிழவனையும் சீக்கிரம் வரச் சொல்லு.



## 4. ஆட்காரன்

உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்.

நந்தனார் மாட்டுக்காரப் பையனாகவும், கிழவன் அடிமையாளாகவும் அந்தணரிடத்தில் வேலைசெய்து கொண்டு வரக் கிழவன் மிகத்தள்ளாதவனாய் ஆள் வேலை செய்ய ஆற்றலற்றுப் போய்விட்டான். அப்போது நந்தனார் பாலப் பருவம் கடந்து யௌவனத்தை யடைந்திருந்தார். அந்தணர் நந்தனாரைக் கூப்பிட்டு எதிரில் நிறுத்தி வைத்துக்கொண்டு அவருடன் கலந்து பண்ணை வேலையைப்பற்றிப் பேசலாயினர்.

அந்தணர் — அப்பா, நந்தா! கிழவனுக்கு முன்போல் வேலை செய்ய முடியவில்லை. வயது மிகத் தளர்ந்து விட்டது. அவன் வேலைமேல் வந்தால் தான் ஒருவனே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வான்; நான் கவலையற்றிருப்பேன்: உழவோ நடவோ, நீரோ களையோ, அறுப்போ படிப்போ எதுவானாலும் தன் தலைமேல் போட்டுக்கொண்டு போய்விடுவான். இப்போது நான் கையொடிந்தவன்போல் ஆய்விட்டேன், என்ன சொல்கிறாய்?

நந்தனார் — சுவாமி! தாங்கள் விசனப்பட வேண்டியதில்லை. அடியேன் இருக்கும்போது என் தகப்பன் என் தள்ளாத வயதில் உழைத்து வருந்த வேண்டும்! தாங்கள்தான் என் மனக் கவலையில் ஆழ்கவேண்டும்! என் தகப்பனைப்போல் யானே பயிர்பச்சைகளைப் பார்த்துக் கொள்கின்றேன். விசனத்தை விட்டொழித்து விடுங்கள்.

அங். — நந்தா! உண்மைதான், அது எனக்குந் தெரிந்த விஷயமே. ஆனாலும் எனக்கோர் ஐயுறவுண்டு.

நந். — அது என்ன? விட்டுச் சொல்லுங்கள்.

அங். — நந்தா! நீ சிவபத்தியில் ஈடுபட்டிருக்கின்றாய், உலகப் பற்றற்றவனாகவும் காணப்படுகின்றாய்: எந்த வேளையில் என்ன நேரிடுமோ, நீ எவ்வாறு திரும்பி விடுவாயோ! என் மனத்துக்கொத்த பறையன் சேரியில் எவனையும் காணேன்; இதுவே என் மனக் கவலைக்குக் காரணம்.

நந். — அவ்வாறு வேற்றுமையாக என்னை நினையாதீர்கள். பத்தி வேறு பயிர்த்தொழில் வேறு? பயிர் வேலைக்குப் பத்தி இடையூறாகுமெனச் சித்தத்தில் ஐயுறல் வேண்டாம். ஆண்டை யிட்ட வேலையை அடிபணிந்து செய்வேன். கடமையைக் கடக்க மாட்டேன். கவலையை யொழித்துவிடும். இன்று முதற்கொண்டே என் தகப்பன் வேலையை எடுத்துக்கொள்கின்றேன். தங்களுக்கு ஒருவிதக் கஷ்டமும் வேண்டாம். அநுமதி கொடுங்கள்.

அங். — அப்படியானால், அவ்வாறே செய், கன்று காலிகளையும் கைவிட்டு விடாதே; எவனையாவது நல்ல பையனைப் பார்த்து அமர்த்திக்கொள், மற்ற வேலைகளை யெல்லாம் கருத்தாய்க் கவனித்துக்கொள். பயிர் வேலை யென்றால் விளையாட்டல்ல, இராசவாதத் தொழில்; பதம் கெட்டால் பலன் கிட்டாது. வெகு ஜாக்கிரதை



யாக வேலை பார்க்கவேண்டும். என்ன, நான் சொல்வ தறிந்தாயா?

நந். — சுவாமி! அறிந்தேன். பயிர் விஷயத்தில் உமக்கொன்றும் கவலை வேண்டாம்; எல்லாம் அடியேன் பார்த்துக்கொள்கின்றேன் ஆனால் ஒரு விண்ணப்பம்: கோயில் குளங்களைப் பார்க்க வேண்டுமென்கிற பேரவா எனக்குச் சிற்சில வேளைகளில் மனத்தி லுதிக்கின்றது; தேர் திருவிழாக்களைத் தரிசிக்க ஒவ்வோர் சமயத்தில் தாங்கள் எனக்கு அநுமதி கொடுக்கவேண்டும். அவ்விஷயத்தில் மாத்திரம் ஆட்சேபஞ் செய்யா திருக்கத் தங்களைக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்கின்றேன். பயிர் பச்சை பசுமாடுகளுக்கு யாதொரு இடையூறும் வாராமல் பார்த்துக் கொள்கின்றேன். வேலையைக் கெடுத்து ஆலயம் போகேன். எதற்கும் தாங்கள் எதுவும் சொல்ல வேண்டியதில்லை; ஏவாப்பணி மேற்கொண்டொழுகுவேன். அடியேன்மீது அவ்வளவு தயை வைத்தருளும்.

அங். — என்னடா! மறுபடி சங்கடத்துக்கு ஆயத்தம் பண்ணிக்கொள்கின்றாயே! நந்தா! உன் மனோபிஷ்டத்தைக் கெடுப்பதற்கு எனக்கு எப்போதும் மனம் வருவதில்லை. ஆலயந் தொழுவது சாலவும் நன்றுதான். அதுவே வேலையாய் இருந்தால் ஆள்வேலை என்னகதி; உன்னை நம்பக் கூடவில்லையே, பித்துப் பிடித்தவனாயிற்றே நீ!

நந். — கடமையைக் கடந்து நடப்பே னென்று கனவிலும் கருத வேண்டாம். அறநெறி மறவேல் —

என்பதை அணுவளவும் மறவேன். என்மீது எப்போதும் சற்றும் சந்தேகம் கொள்ளவேண்டாம், இது சத்தியம்.

அந். — சரி, பார்ப்போம், வேலையைப் பார்; உழவினைக் கவனித்துக்கொள்.

அன்று முதல் நந்தனார் அந்தணரின் அடிமையாயிட்டார். அல்லும் பகலும் அந்தணர் வேலையிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வந்தார். பசுமாடு மேய்க்கப் பையனொருவனை நியமித்துக் கொண்டார். வைகறையி லெழுந்து குளித்து முழு நெற்றியில் நீறு பூசி ஊருக்கு வந்து கொட்டகையினின்றும் பசுமாடுகளைக் கட்டவிழ்த்துத் தண்ணீர் காட்டிப் பையனுடன் அவைகளை வெளியே மேய்ச்சற் காடுக் கோட்டித் தான் கலப்பை, நுகம், சால், மண்வெட்டி, களைகொட்டி, அரிவாள் இவை முதலானவைகளில் எதெது வேண்டுமோ அவைகளை யெடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்று உழவோ, நடவோ, களையோ, அறுப்போ ஏதேனு மொன்றைச்செய்வார். இருட்டிப் போனதும் ஊருக்கு வந்து தொழுவத்தைப் பார்த்துக்கொண்டு அந்தணரிடம் உத்திரவு பெற்றுச் சேரிக்குச் செல்வார். அங்கு உள்ளதையுண்டு தமை வர்களுடன் சில நேரம் பேசிக்கொண்டிருந்து பின்பு அறிதுயில் கொள்வார்.

இருக்கினும் நிற்கும்போதும் இரவுகள்
துயிலும் போதும்
பொருக்கென நடக்கும்போதும் பொருந்தியே
துய்க்கும் போதும்



விருப்புடன் வயலில்தங்கி வேலைகள்
செய்யும் போதும்
செருக்கில னுயர்ந்தநல் சிந்தையைச்
சிவன்பால் வைத்தான்.

இவ்வாறு நந்தனார் அந்தணரிடம் அடிமைத் தொழில் புரிந்து ஆள் வேலை செய்துகொண்டிருக்கவும், தம் குலத்துக் கேற்றபடி சிவத்தொண்டு புரிவதிலும் சிறந்து விளங்கினார். ஒழிந்த வேளைகளில் சிவாலயங்களில் பேரிகை மத்தளம் முதலிய கருவிகட்குத் தோலும் வாரும், வீணை யாழ்கட்கு நரம்பும், பூசனைக்குக் கோரோசனையும் சேர்த்து வைத்துக்கொண்டு வேண்டிய போதெல்லாம், விலையின்றி வழங்கி வருவார்.

இவரது பத்திமைப் பாங்கைக் கண்ட ஊரார் சேரியார் யாவரும் ஒருங்கே மகிழ்ந்து, இவரிடம் மதிப்பும் மரியாதையும் காட்ட ஆரம்பித்தனர். இவரிடம் அன்பு கொண்ட சிலர் இவருக்கு உயிர்த் தோழராய் அமைந்தனர். வேலையில்லாத காலங்களில் நந்தனார் துணைவருடன் அக்கம் பக்கங்களில் நடக்கும் தேர் திருவிழாக்களுக்கு அந்தணர் அனுமதி பெற்றுச் சென்று வருவார். பயிர்வேலை பரப்பாக இருக்கும் நாட்களில் உற்சவாதிகளுக்குப் போகவேண்டுமானால் நந்தனார் தோழர்களைக் கொண்டு வேலைகளை முடித்து விட்டு அவர்களுடனே சென்று இரவிலேயோ பகலிலேயோ சுவாமி தரிசனம் செய்துவிட்டு வந்துவிடுவார். சிற்சில வேளைகளில் தோழர்களைச் சூழவைத்துக்கொண்டு நந்தனார் பத்தி மார்க்கங்களைப் பற்றித் தனக்குத் தோன்றியவைகளை அவர்களுக்குச் சொல்

விக்கொண் டிருப்பார். தோழர்கள் நந்தனாரைத் தங்கள் மத்தியில் வைத்துக்கொண்டு இவ்வாறு செவிக்கு இன்பம் ஊட்டிக்கொள்வதில் பெருமிதமும், பேரவாவும், பேரானந்தமும் அடைந்திருந்தனர்.

நந்தனார் அந்தணரிடம் அருமை யடிமையாய் அவர்தம் மனத்துக் கொத்துப் பண்ணை வேலைகளைப் பாங்குபெறத் தாங்கி நடத்திக்கொண்டு வருங்காலத்தில், ஒரு நாள் அந்தணர் தமது நண்பராகிய முதலியாரைக் காண நேர்ந்தது.

முத. — வாருங்கள், நமஸ்காரம்.

அந். — மகராஜனாயிரும்.

முத. — ஊரில் உம்மைப் போன்ற பாக்கியவான்களில்லை, உமது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

அந். — என்ன, அப்படிச் சொல்கின்றீர்கள்! கிழவனும் வேலையை விட்டு நின்றுவிட்டான், நந்தன் அறியாதவன், பயிர்வேலையிற் பழக்க மில்லாதவன், கோயில் குளம் தேர் திருவிழாவென்று திரிகின்றவன்; அதனால் எனக்கு எவ்வளவு மனக்கவலை!

முத. — கண்ணேறு படப் போகிறதென்று கட்டுக்கட்டிப் பேசுகின்றீரோ! உம்முடைய பண்ணையில் வேலை சாய்கிறுப்போல் எங்குமே நடக்கவில்லையே! உழவென்றாலும் நடவென்றாலும், அறுப்பென்றாலும் படுப்பென்றாலும் ஊரும் சேரியும் ஒன்றுகூடி யன்றோ போகின்றது!



உமக்கு அவ்வளவு சாயுகாலுள்ளபோது மனக்கவலை யேனோ? வெளிச்சம் போடுகின்றீரோ!

அந். — அஃதன்று, முதலியாரே! நீங்கள் ஏதோ ஒருநாள் நிகழ்ச்சியைப் பற்றிப் பேசிவிடுகின்றீர்கள்: கூட இருக்கவேண்டும் கூட்டுப்பயிர் இட்டுப் பார்க்கவேண்டும்; ஊரில் எவனாவது மொட்டையாண்டி வந்துவிட்டாலும் சரிதான், எங்கேயாகிலும் தேர் திருவிழா நடந்தாலும் சரிதான், அன்றைக்கல்லவோ பார்க்கவேண்டும் பார்ப்பானுடைய அல்லற் பிழைப்பை! வெறுமை எதையோ கண்டு எதையோ சொல்லிவிட்டால் என்ன பிரயோஜனம்!

முத. — சுவாமி! தாங்கள் சொல்வது எனக்கு மிக்க வியப்பைத் தருகின்றது. நந்தன் வேலைக்கு வந்தபின் உமது பண்ணைவேலை ஊருக்குப் பிந்திப் போயிற்றா? காலவிதைப்பாடு தவறியதா? களையெடுப்பது தட்டிற்றா? அறுப்பேதாவது தவறிற்றா? அல்லது எருவுழவு எஞ்சியதா? நந்தன் இருக்கிறவரையில் உமக்கும் உமது கன்று காலிகளுக்கும் குறைவேது!

அந். — அப்படியே இருக்கட்டும்; அவன் என் வேலையில் நீடித்திருப்பது என்ன நிச்சயம், அதைச் சொல்லும் முதலில்!

முத. — ஏன், அப்படிப்பட்ட ஐயம் ஏதாவது உமக்குண்டோ?

அந். — முதலியாரே! உன்மத்தங் கொண்டவர்களை ஒருகாலும் கணக்கில் வைக்கப்படாது. அவ

னுக்குக் கோயில் வைத்தியம் வந்துவிட்டால் தங்குகின்றானா, தரிக்கின்றானா! என்னத்துக்கு அந்தக் கொள்ளை! வேறேதாவது வேண்டுமானால் பேசும்.

மூத. — அப்படிச் சொல்லாதேயும், நந்தனால் உமக்கு நன்மை நடக்குமே யொழியத் தீங்கொன்றும் நேராது. நான் என்னமோ ஏதோவென்று நினைத்தேன்! நந்தனிடத்தில் நலங்களெல்லாம் நன்கமைந்துள்ளன.

அந். — முன்னைவிட இப்போது என்ன நலங்களை நந்தனிடத்திற் கண்டுகொண்டீர்கள்? நந்தனால் நத்தம் பாழாய்ப்போகிறதென்றீரே!

மூத. — ஒழுக்கம், பத்தி இவைகளாற் சேரி நிறைந்திருக்கின்றதே! பறையன் என்றால் பத்தடி எட்டிப் போனவர்கள் நந்தனால் இப்போது நயம்பட வல்லவோ உரைக்கின்றனர்! தோல், வார், விளாரம்பு, கோரோசனை ஆகிய இவைகளை நந்தன் சிவத் திருப்பணிக்கென்று இலவசமாய்ச் சேர்ப்பிக்கின்றானே. தன் குலத்துக் கேற்ற வண்ணம் தன்னாற் கூடிய திருப்பணிகளை உருக்கமாகச் செய்பவன் எச்சாதியானாலும் ஏத்தப்படுவதற்கு உரியவனாவானன்றோ? இவைகளினா லெல்லாம் உமது அடிமைக்குப் பெருமை ஏற்பட்டுப்போகவில்லையோ?

அந். — எது எவ்வாறாயினும் அந்தணனிடம் இருக்கும் அடிமையான் சிவபக்தியுள்ளவன் என்பது எனக்கு ஒரு திருப்திதான்.



மூத. — அப்படிச் சொல்லும்! அவனால் உமக்கு எப்போதும் குணமே தவிர குற்றமொன்றும் நேராது.

அந். — நல்லது, போய் வருகிறேன்.

மூத. — அப்படியே செய்யும், நமஸ்காரம்.

## 5. சிவனடியான்

### பத்தி வலையிற் படுவோன் காண்க

இவ்வாறு நந்தனார் அந்தணர் பண்ணைவேலைகளை அடைவுடன் செய்துகொண்டு ஒழிந்த நேரங்களில் தோல் வார் கோரோசனை முதலியவைகளை வேண்டியபடி சிவாலயங்களுக்குக் கொடுத்தலாகிய திருப்பணியைச் சிரமேற்கொண்டு நடத்திவந்தார். ஒவ்வொரு தினத்தில் தோழர்களுடன் கூடிக்கொண்டு சிவாலயங்களுக்குப் போய்க் கோபுரவாயி லெதிரில் நின்று அன்பு மேலிட ஆடிப் பாடித் தரையில் விழுந்து கும்பிட்டெழுந்து, இரண்டு கைகளும் தாமே சிரமே லேறிக் குவிய நின்று, 'என தாண்டவனே! எம்பெருமானே! நின்னைக் கண்ணாரக் கண்டு களிக்கப்பெறாத கடைச் சாதியானாகிய அடியேனை ஆட்கொள்வ தெந்நாளோ' என்று ஏங்கி யேங்கிக் கண்ணீர்விட்டுக் கதறியழுவார். திருவிழாத் தினங்களில் வாகனமேறி வெளி வந்தருளும் பெருமான் திருக்கோலங்கண்டு காணாது கண்டதைப் பார்த்துப் பார்த்துப் பரமானந்த மடைந்து, கூத்தாடிக் குதூகலித்துக் கொக்கரிப்பார்.

தேர் திருநாள்களுக்குப் போகும்போதெல்லாம் சேரியிலுள்ளவர்களை வீடு வீடாகச் சென்று கலியாணத்துக் கழைப்பதுபோல் களிப்பு முகத்துடன், 'வாருங்கள் தேருக்குப் போகலாம், வாருங்கள் திருவிழாவுக்குப் போகலாம், வாருங்கள் நமதப்பனைக் காணலாம், வாருங்கள் அவனது திருக்கோலங் கண்டு மகிழலாம்' என்று சொல்லி ஒவ்வொருவரையும் கைப்பிடித் தழைப்பார். அப்படி வராதவர்களுக்காக வருந்துவார், தோழர்களை யெல்லாம் கூட்டங் கூட்டிக்கொள்வார். யாவருக்கும் மத்தியில் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும், பெருமானது திருநாமங்களை யெல்லாம் எடுத் தோதிக்கொண்டும், 'விரைந்து வாருங்கள்! சீக்கிரம் நடவுங்கள்!' என்று எச்சரித்துக்கொண்டே ஓட்டமும் நடையுமாகப் போவார்கள். நந்தனாருடன் செல்பவர்களுக்கு நடை, நடையாகத் தெரியாது. 'என்ன! ஒரு நொடி நேரத்தில் வந்துவிட்டோமே!', என்று தங்களுக்குள்ளே ஆச்சரிய மடைவார்கள். 'நந்தன் கூடப்போனால் நடையுந் தெரியுமா!' என்று யாவரும் சொல்லிக்கொள்வார்கள். போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்ததும், தோழர்களையும், தொடர்ந்து வந்தவர்களையும் நோக்கி, 'மாடவீதி மகிழ்ச்சியைத் தரவில்லையா! மதிலழகு மனத்தைக் கவரவில்லையா! கோபுரதரிசனம் கொண்டாட்டமல்லவா! அந்தணர் வேதகோஷ்டத்தைக் கேளுங்கள், அவர்தம் அடிகளில் விழுந்து பணியுங்கள், அடியார் குழாத்தின் அழகைப் பாருங்கள், காலகாலன் பவனி வருவதைக் கண்டு களியுங்கள்,' என்று சொல்லிக்கொண்டு அங்கங்கே நமஸ்காரஞ் செய்துகொண்டு வீதி வலம் வருவார்.



தேர்த் திருவிழாவாக விருந்தால் நந்தனார்கொண்டாட்டத்துக்குக் கங்குகரையில்லை! தேர்வடம் எங்கே ஆளில்லாம லிருக்கிறதோ அங்கே கண்டோடிப் பிடித்துக்கொண்டு தன் பலங்கொண்ட அளவும் இழுப்பார். உடன் வந்தோர்களை யெல்லாம் வந்து பிடித்திழுக்கும்படி வேண்டிக்கொள்வார். 'தேகத்திலுள்ள நோய்களெல்லாம் தேர்வடந் தொட்டபோதே தெரியாதோடும்,' என்பார். 'மனக்கவலையின் பாரம் ஒழிய மணித் தேர் வடத்தின் பாரம் தாங்க வேண்டும்,' என்பார். போகிறவர் வருகிறவர்களை நோக்கி, 'சற்று வாருங்கள், ஒரு கை பிடியுங்கள்,' என்பார். தேர் அடிவிட்டுப் பெயரும் போதெல்லாம் 'அரகரா! அரகரா! என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே பிடித்த வடத்தோடு நடப்பார். 'தேர் இழுக்கும் அடியார்களுக்கு ஓர் இழுக்கும் இல்லை,' என்பார். தேர் நிற்காமல் சிறிது தூரம் சென்றால், 'ஆனநதம் ஆனந்தம் அரனே! ஆனந்தம் ஆனந்தம அரனே!' என்று பாடிய படியே போவார். தேரோடி நிலையில் நின்றதும் கோயிலை வலம் வந்து கோபுர தரிசனம் செய்துகொண்டு ஊருக்குத் திரும்புவார்.

ஒருநா ளிரவு நந்தனார் விளைச்சலண்டை தோழனொருவனுடன் காவல் காத்துக்கொண் டிருந்தார். ஒருவன் நந்தனாரை நோக்கி, 'அண்ணே! நாளை இரவு திருப்புன்கூரில் இருஷபவாகனச் சேவையாம், ஊரில் யாராரோ செல்கின்றனராம், நம்முடைய சங்கதி என்ன? போகவேண்டியதுதானே?' என்றான்.

நந். — என்ன தம்பி, திடீரென்று சொல்லுகிறாயே! நேற்றே தெரிந்திருந்தால் அறுப்பறுத்து முடித்

திருக்கலாமே. விளைச்சல் தாரிப் போகிறது, ஐயரும் பேசாமலிருக்கின்றார். இன்றைய தினம் ஆரம்பித்து இரண்டொரு நாளில் அறுவடை முடித்துவிடலாமென்று நினைத்திருக்கின்றேன். ஐயரும் காலையில் இங்கு வருவார், அனுமதி கேட்க வேண்டும். குறைந்தது இரண்டு நாளானும் செல்லுமல்லவா? எப்படித் திருவிழாவுக்குப் போவது!

தோழன். — அண்ணா, இதற்குத்தானா கவலைப்படுகின்றீர்! நீர் மனம் வைத்தால் அருணோதயத்துக்குள் அறுப்பறுத்து, பொழுது படுவதற்கு முன் போர்ப்படுத்தி யாய்விடாதா! இதுதானா ஒரு பெரிய வேலை!

நந் — அதெப்படி, தம்பி!

தோ. — தாங்கள் மாத்திரம் ஏவலைத்து விடுங்கள், நமது நண்பர் கூட்டங்கள் நெல் வயலில் புகுந்து விட்டார்களானால் கணப் போதில் காம்பாய் விடாதா! வேணுமானால் வேலை இட்டுப்பாரும்.

நந். — எதற்கும் ஆண்டை யநுமதி வேண்டு மல்லவா?

தோ. — இதோ வருகின்றாரே, ஐயர்; தேடிப்போன தெய்வம் தெருவிலேயே வந்ததுபோல!

அந். — நந்தா, சாப்பாடாயிற்றா?

நந் — ஆயிற்று, ஆண்டையே! விளைச்சல் தாரிப் போயிற்றே!



அந். — ஆம், நேற்று முந்தா நாளே அறுத்துவிட்டிருக்க வேண்டும். கூலி ஆட்களை வைத்து இரண்டொரு நாளில் வேலையை முடித்துவிட வேண்டும். எங்கே கூலியாட்கள் கிடைக்கப் போகிறது!

நந். — நாளையதினம் அறுத்துவிட்டுத் திருப்புன்கூருக்குப் போகலாமென் றிருக்கிறேன்.

அந். — உனக் கென்னடா, பைத்தியம் பிடித்துவிட்டதோ! ஊர் சொல்வதற்கும் உனது பேச்சுக்கும் சரியாய்த்தா னிருக்கிறது. நாலு காணி அறுப்பென்ன, நாளொன்றில் ஆவதென்ன! குறைந்தது ஆட்கள் ஐம்பதுக்குமேல் வேண்டுமே! அப்படி வைத்தாலும் நாளைக்கு முடிந்துவிடுமா! இரண்டு நாளாவது பிடிக்காதா! இருக்கட்டும், இது என்ன பைத்தியம்! கோவில் கோவி லென்று வேலை யிருக்கும்போதுகூடவா கோவில்! இட்டபயிரை நட்டம் பண்ண இதுதான் வழி! போடா போ, கோயிலுமாயிற்று குளமுமாயிற்று, பைத்தியக்காரனா யிருக்கிறாய்!

நந். — சுவாமி! அடியேன் எப்படியாவது வேலையைப் பூர்த்தி செய்துவிடுகின்றேன், அநுமதி தாரும்.

அந். — ஏதோ, பார்ப்போம் உன் சாமர்த்தியத்தை! பத்திரம், விடிய வருகின்றேன்.

தோ. — அண்ணா! இதோ வந்துவிட்டார்கள், நம்மவர்கள்.

தோழர்கள். — அண்ணா யாவரும் அரிவாளோடு வந்திருக்கின்றோம், இறங்கலாமா அறுப்பில்?

நந். — இதோ, நானும் வருகின்றேன்.

நந்தனாரும் தோழர்களும் அறுப்பில் இறங்கி உதய மாகுமுன் அறுவடை முடித்து அரிகளைச் சுமைகளாகக் கட்டிக் களமேட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள். விடிந்தவுடன் அந்தணர் வந்து பார்த்து அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. பொழுதுபடுமுன் நந்தனாரும் தோழர்களும் அரிமிதியடித்து, போர்ப்படுத்தி, அந்தணர் வீட்டில் நெற் கொண்டுபோய்ச் சேர்த்து, வைக்கோலையும் போர் போட்டு விட்டார்கள்.

அந். — நந்தா! உன்னுடைய வேலையே வேலை! உன்னைக் காணும்போதே எனக்கு ஏதோ ஒரு மாதிரியாய்விடுகிறது. ஆகாததை ஆக்கி வைக்கின்றாய், கூடாததைக் கூட்டி வைக்கின்றாய்! கடவுளை நம்பினோர் கைவிடப்படார் — என்பதற்கு அத்தாட்சி நீயே யானது கண்டேன்.

நந். — சுவாமி! திருப்புன்கூருக்குப் போய்வரலாமா? உடனே திரும்பிவிடுகின்றேன்.

அந். — என்னடா இதே பைத்தியமோ! வெளிவேலையாய்விட்டால் ஏதோ ஒன்றைச் செய்யலாமே என்கிற எண்ணம் உனக்கில்லையே; எந்த ஊருக்குப் போகலாம், எந்த உற்சவத்திற்குப் போகலாம் என்று இதுவே பாட்டாய் விட்டதே!



கோவிலென்ன உனக்கு எந்நேரமும் கோவில், போடா போ!

நந். — ஏதோ போகவேண்டு மென்கிற எண்ணம் வந்திருக்கிறது.

அந். — அடா நினைத்ததை முடித்துவிட வேண்டும் போலிருக்கிறதே! நிற்க நிதானிக்க வுதவாதா! இருக்கட்டும், எப்போது திரும்புவாய்?

நந். — சுவாமி! நாளைக்கே வந்துவிடுகின்றேன்.

அந். — சீக்கிரம் திரும்பிவிடு.

இத்திருப்புன்கூர் ஆதனூரிலிருந்து இரண்டரை நாழிகை வழி தூரம். தோழர்களுக்கு நந்தனாருடன் புறப்பட்டது தெரியுமேவொழிய இருட்டு முன்னமேயே திருப்புன்கூர் அடைந்து விட்டதை யறியாதவர்களானார்கள். மங்கள வாத்திய ஒலியும் மற்றைய விழாவொலிகளும் இவர்களுக்கு என்று மில்லாத மகிழ்ச்சியைத் தந்தன. இரவு நாலைந்து நாழிகை வரையில் ஊரையும் கோயிலையும் சுற்றி வந்தபடியேயிருந்தார்கள். கோபுர வாயிலில் இடபவாகனச் சேவை கண்டு நந்தனார் அடங்கா மகிழ்ச்சி கொண்டு ஆடினர், பாடினர், அரனைக் கொண்டாடினர். திருப்புன்கூராளியே! இருப்பைக் காந்தம் இழுக்கின்றவாறு என்னைச் சற்றுத் திருப்பிக்கொள்ள லாகாதா! என்பார். எந்தை பெருமானே! என்னை ஏறெடுத்துப் பார்க்கலாகாதா! என்பார். நடராஜப் பிரபுவே! நாயேன் மீது சிறிது நாட்டம் வைக்க லாகாதா! என்பார். முத்திக்கு நாயகனே! நும் மூலத்தான சந்நிதானத்தை அடியேன் முன்னின்று தரிசிக்கலாகாதா!

என்பார். நானிலொன்றாக விருந்தால் நான் இவ்வாறு கோடியில் நின்று குழம்பி, மனஞ் சாம்புவேனோ! என்பார். இலிங்க தரிசனங் கண்டு களிப்பதென்னாளோ! என்பார். கிட்டாததை வெட்டென மறவென்பாரோ! என்பார். இன்னும் எத்தனை ஜன்மங்கள்தான் எடுக்க வேண்டுமோ! என்பார். பத்தன் ஆயினேனே, பரிகார மொன்றில்லையோ! என்பார். இவ்வாறு பரிந்து ஏங்கித் துதித்துக்கொண்டே இடபவாகனப் பெருமான் பின் சென்று தோழர்களுடன் வீதி வலம் வந்து மறுபடி கோபுர தரிசனம் செய்து கொண்டு திரும்புகாலில், ஆலயத்துக் கருகில் ஒரு பெரிய பள்ளத்தைக் கண்டு ஆங்குச் சென்று மேட்டின்மேல் உட்கார்ந்து உற்சவத்தைப்பற்றிப் பேசிக் கொண் டிருந்தனர். அப்போது—

நந். — தம்பிமாரே, இப்போது எனக்கு ஒரு எண்ணம் உதிக்கின்றது, அது நாமெல்லோரும் மனது வைத்தால் ஈடேறிவிடும் என்றும் தோன்றுகின்றது.-

தோ. — என்ன அண்ணா அது என்ன! உமது எண்ணத்திற் றோன்றினால் அது ஈடேறாமலும் போகுமா! அதென்ன. சொல்லும்! சொல்லும்!

நந். — இந்தப் பள்ளத்தை நாமெல்லோரும் சேர்ந்து ஏன் குளமாக்கிவிடக்கூடாது; வருவார் போவாருக்கு நல்லதோர் வசதியாகுமே; பல அடியார்களுக்கும் மிக்க பிரயோஜன முள்ளதாகுமே. என்ன நான் சொல்லுகின்றது உமக்கு எப்படிப் படுகின்றது.



ஒரு தோழன் — இதென்ன, அண்ணா மனதிற் பட்டபோதே ஆயிற்று! நான் இவ்வூர்ச் சேரிக்குப் போய் மண்வெட்டி தட்டு முதலியவை கொண்டு வந்து விடுகின்றேன்; இதோ ஆரம்பித்து முடித்து விடலாம்; விடியுமுன் குளமுந் தண்ணீரும் வெட்டிக் கண்டு விடலாமே.

மற்றைத் தோழர்கள் — விடலாமே யென்று விஷயத்தை விட்டு விடுகிறாயே, என்ன, ஓடு ஓடு சீக்கிரம் கொண்டுவந்துவிடு!

அரை நிமிஷத்திற் கெல்லாம் யாவரும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டனர். வெட்டுவார் சிலபேர், தூக்குவார் சிலபேர், கொண்டு மண் கொட்டுவார் சிலபேர். நந்தனார் வெட்டுவார் சிலநேரம், தூக்குவார் சிலவேளை, கொண்டு கொட்டுவார் சில சமயம். தோழர்கள், 'வேண்டாம் அண்ணா, எல்லாம் நாங்களே செய்து விடுகிறோம், நீர் கரைமேல் நின்று எங்களை வேலை வாங்கிக்கொள்ளும், இதோ பள்ளம் குளமாகிவிட்டது' என்று சொல்லியும் கேட்காமல் ஏதாவதொரு வேலை செய்துகொண்டே இருப்பார். நடு நிசிவேளை யானபோதிலும் நிமலனாகிய சிவபெருமானுக்கென்று அன்போடு செய்யுந் தொண்டாகையால் மண் வெட்டிப்போட்டுத் தூக்கிக்கொண்டுபோய் மேட்டிற் கொட்டுவதி லெவரேனும் இளைப் படைந்தாரில்லை. என்ன! இவ்வளவு கொஞ்சம் தூக்குகின்றாயே! என்பா னொருவன்; என்ன! மண் பஞ்சைப் போல் பளுவில்லையே! என்பா னொருவன்; மேடேறுவது பள்ளத்தி லிறங்குவதுபோ லிருக்கின்றதே! என்பா னொருவன்; என்ன உற்சவத்திற்கு வந்தவர்க

ளெல்லாம் நம்முடன் வேலைசெய்கிறார்களே! என்பாரொருவன்; நமது சேரியாட்களெல்லாம் எப்போது நம்முடன் வந்து கூடிக்கொண்டார்கள்! என்பாரொருவன்; ஐயர் என்ன அதட்டி அதட்டி வேலை வாங்குகிறாரே! என்பாரொருவன். இப்படியாக இரவெல்லாம் வேலை செய்து, கரையெல்லாம் மணல் நிறையப் பள்ளத்தில் முழுகி முழுகி வாரி வாரிச் சிலர் கொடுக்கவும், வாங்கி வாங்கிச் சிலர் கொட்டவும், பள்ளம் பரவலும் ஆழமுமானதோர் பெருங்குளமெனக் கண்டபின் யாவரும் கரை யேறினார்கள். அப்போது நந்தனார் தோழர்கள், தங்களையும் தங்கள் நண்பரையு மாத்திரமே கண்டார்களே யொழியத் தங்களுடன் வேலை செய்த நூற்றுக்கணக்கான ஏனையவரில் எவரையும் கண்டிலர்! அப்போது அருணோதயத்துக்கு ஐந்து நாழிகைப் போதிருக்கும். தோழர்கள் கட்டாந் தரையிற் கண்வளர்ந்தனர். நந்தனார் நடராஜப் பெருமான் நற்கருணையை நினைந்து நினைந்து தமக்குள்ளே ஆனந்தம் பொங்கி வழிய, இருந்த இடத்திலேயே இன்புற் றிருந்தனர். உதய மானதும் நந்தனார் தோழர்களை எழுப்பி இட்டுக் கொண்டு கோயில் கோபுரவாயிலை அடைந்தார்.

பள்ளத்தண்டை வந்த ஊராரெல்லாம் அது ஒரு பெருங் குளமாகக் காணப்பட, மிக்க ஆச்சரியம் கொண்டு, 'இதென்ன அதிசயம், இங்கு நேற்றிரவு வந்த பெருங் கூட்டத்தில் எந்தப் புண்ணியவானின் எண்ணத்தினால் இவ்வா றமைந்ததோ! நமது சிவபெருமான் பெருங் கருணையோ! என்று அதிசயித்துக் காரணமறியாது தியங்கித் தத்தம் இடம் சேர்ந்தனர்.



வெகுநாளைய பள்ளம் ஒரு இரவில் ஒப்பற்ற குளமானதும், அதற்குக் கண்ணுக் கழகிய கரையானதும், மனதுக்கு இன்பமூட்டும் மரங்களின் வரிசையும், கரைகரையாவண்ணம் அமைக்கப்பட்ட படிகளின் வனப்பும், நான்கு பக்கத்திலும் அடைவுடன் காணப்பட்ட இறங்கு துறைகளும் பார்த்தவர் யாவருக்கும் பரமானந்தத்தை விளைவித்தன. சில நேரத்துக்கெல்லாம் குளச்செய்தியைக் குடிகளெல்லாம் அறிந்தனர். ஊராரெல்லாம் கூடிக் கூடி உவப்புடன் பேசிக்கொள்ளலாயினர். மின்னாமல் பெய்ததே! என்பார் சிலர், பலநாள்வேலை ஒரு விடுதியில் எப்படி முடிந்ததோ! என்பார் சிலர். அவசர வேலைக்கு அலைகுறைவொன்றும் இல்லாததன்றோ அருமை! யென்பார் சிலர். நமது மூதாதையர்களின் புண்ணியங்க ளெல்லாம் திரண்டுருண்டு தேடிவந்து பலித்ததவோ! என்பார் சிலர். நமது ஊரும் நாமும் செய்த பாக்கியமே பாக்கியம்! என்பார் சிலர். எல்லாம் சிவன் செயல்! என்பார் மற்றுஞ் சிலர். இவ்வாறு அத்திருப்பதி யெல்லாம் ஆனந்தக் கடலிலும் ஆச்சரிய வெள்ளத்திலும் முழுகி இருந்தது.

குளத்தண்டை யிருந்து கோபுர வாயிலண்டை சென்ற நந்தனாரும் தோழர்களும் சந்நிதானத்திற்கு நேராக நின்று கும்பிட்டுக்கொண் டிருந்தார்கள். அப்போது நந்தனார் :—

எனதாண் டவனே! எனதாண் டவனே!
எனதாண் டவனே! யருள்பெறும் பேறே!
பூம்பொழில் சோலை புன்கூர் தன்னை
ஆம்பதி கொண்ட அழல்மா னேந்தி!

தொல்லை வருணம் நான்கெனச் சொல்வர்
பொல்லா வருணம் பறையெனப் பழமால்.
அந்த வருணம் அடியே னுதித்தேன்!
எதுவோ நியாயம் இழிவெனப் பட்டேன்
பார்த்தவர் எல்லாம் பழிக்க நேர்ந்தேன்
சிர்த்தவர் சேர்க்கை செயவொண் ணாதே!
கோயில் கண்டேன் கோபுரந் தாண்டேன்
நேரில் சந்நிதி நின்றுதொழ இல்லேன்!
இதுவோ என்கதி! இதுவோ என்கதி!
பதியே எனையொரு பத்தனைக் கொள்வையோ!
பறையன் என்று பழிப்பையோ நீயும்!
இறைவா வெனையாட் கொள்வ தெந்நாளோ!

என்று இவ்வாறு தன்னையும் தன் பிறப்பையும் நொந்து நொந்து பாடித் துதித்துப் பரவசப்பட்டு நின்றார். அவருடன் தோழர்களும் தொழிலற்று நின்று தங்களை மறந்தனர். சிறிது நேரத்திற் கெல்லாம் சிவலிங்கம் தங்களுக்கு நேரே தோன்றுதலைக் காண்பதுபோல் கண்டனர். கண்டு விழித்தவர் போல மறுபடி தங்கள் நிலையை அறிந்து அருகே நோக்க, நந்தனார் தரையில் விழுந்து கிடக்கக் கண்டனர். அவரைத் தோழர்கள் தூக்கி நிறுத்த, நின்றவர் — 'எம்பெருமானே! என தாண்டவனே! கண்டேன் கண்டேன், காணலாகாத ஒன்றைக் கண்டேன்! நின்னருள் பெற்றேன், பெறுதைப் பெற்றேன்! எந்நாளோ வென் றிருந்தேன், இந்நாளே கிருதார்த்த னானேன்! சந்நிதி கண்டேன், சச்சிதானந்த சொரூபமும் கண்டேன்! கண்டேன் கண்டேன், விண்டேன் விண்டேன்!' — என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் அடியற்ற மரம்போல் படியின் மீது விழுந்து, விழுந்தபடியே வெகுநேரம் கிடந்து, பின்பு தெளிந் தெழுந்து





நந்தனாருக்குத் திருப்புன் ...ல் நந்தி விலகினது.

ஆவணக் காப்பகம்
183368

கை கூப்பித் தொழுது, ஆனந்த பாஷ்பஞ் சொரிய மயிர்க் குச்செறிய — 'அருட்கடலே! ஆனந்தக் கடலே! இருட்கடற் கரையே! இன்ப சொரூபமே! எவ்வுயிர்க்கும் நாயகரே! எனதாண்டவரே! ஆண்டவரே! அடியேனை ஆட்கொண்டவா! நாயேன் பெற்ற பேற்றிற்கு ஈடுமுண்டோ! எடுப்புமுண்டோ! எளியேன் ஒரு பொருளோ! என்னே, என்னே! நின் கருணை என்னே! எம்பெருமானே! மகாப்பிரபு!' — என்று சொல்லிக்கொண்டே தோழர் வேண்ட சந்நிதி விட்டு அரிதில் அடிபெடுத்து வைத்து, ஆதனூர் நோக்கி நடக்கலாயினர்.

## 6. நாளைப் போவான்

செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்

நந்தனாரும் நண்பர்களும் அன்றிரவே ஆதனூர் சென்றடைந்தனர். வழக்கம்போல் நந்தனார் அந்தணர் பணியில் அமர்ந்திருந்தனர். திருப்புன்கூரில் குளந்தொட்டது இன்னார் என்றும், கோயில் நந்தி வழிவிட்டது இன்னாருக்காக வென்றும் அநேகநாள் வரையில் அக்கம்பக்கம் அறியாதிருந்தது. அவ்விடயம் நந்தனார் நண்பர்களுக்குக் கனவுகண்டாற்போல் இருந்ததே யொழிய அவர்கள் அவ்வதிசயங்களைத் [illegible] அறிந்தவரல்லர். நந்தனார் தன்மையை [illegible]ற்சிலர்க்கு மாத்திரம் அச்சேதிகளைப்பற்றி [illegible] அவர்பொருட்டுச் சிவபெருமானால் நடந்தேறி [illegible]க்கவேண்டுமென்னும் சந்தேகம் உண்டு. நானேறத்தேற நந்தனார் பொருட்டே



அவைகள் நிகழ்ந்தனவென்னும் வதந்தி முற்றி, அவைகள் அந்தணர் காதுக்கும் எட்டிற்று. ஆனால் அவர் அதைப்பற்றி நந்தனாரைக் கேட்பதுமில்லை. நண்பரையும் விசாரித்ததில்லை. ஆயினும் அதுமுதல் அந்தணர் நந்தனாரைச் சிறந்த சிவபக்தரெனவே மதித்து முன்னிலும் மிக்க மரியாதையாகவே நடத்திவந்தார். நந்தனாரோ வேலைகளையெல்லாம் அந்தணர் ஏவாமலே அரைகுறையொன்று மில்லாமல் எப்போதும்போல நிறைவேற்றிக்கொண்டு வந்தனர். ஆண்டைக்கும் கவலையில்லை. அடிமைக்கும் குறை இல்லை.

ஒருநாள் முதலியார் வீட்டண்டை சில கிராமத்தார் வந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது —

முத. — திருப்புன்கூர் சேதியொன்று பேசிக்கொள்கின்றார்களே, அதுபற்றி ஏதாவது உங்களில் யாராவது கேட்டதுண்டோ!

ஒருவர் — நானும் காற்று விசேஷமாய்க் கேள்விப்பட்டேன். அங்கு ஒரு புதுக் குளம் புதுமையாய்ப் பொழுது விடிவதற்குள் சமைக்கப்பட்டுத் தோன்றியதாம். உதயத்துக்கெல்லாம் ஈசுவரன் கோயிலின் நந்தி ஒதுங்கி இருந்ததாம். இவை இரண்டும் ஒரு பறையன் விஷயமாய் நடந்ததென்றும் சொல்லிக் கொள்கிறார்கள். அவன் நந்தன்தானென்று நமதூரிற் சிலர் சமுசயப்படுகிறார்கள்.

இன்னொருவர் — சேரியில்தான் இவ்விஷயம் கொதிக்கின்றதே. பறையர்களெல்லாம் நந்தனை பெரிய சாமியாரென்றல்லோ மதித்திருக்கின்றார்கள்!

மற்றொருவர் — ஏன் நந்தனை அவ்வாறு கொள்ளக் கூடாது! அது அதிசயமல்லவே! குலத்துக் கொத்த குணமும், அந்தஸ்துக்குத் தக்க அடக்கமும், பார்ப்பனரிடம் பணிவும், கண்டவர்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிடுதலும், சிறந்த சிவ பக்தியும், கடமையிற் றவறாமையும், செய்வன திருந்தச் செய்தலும், விவசாய வேலைகளில் விமரிசையும், மெய்யில் விருப்பும், பொய்யில் வெறுப்பும், ஜீவகாருணியமும், தன்னயம் கருதாமையும், சேரியில் பெரியோருக்கும் சிறியோருக்கும் சிவபக்தியைப் புகட்டுதலும், இப்பேர்ப்பட்ட நலன்களையுடைய அவனைச் சாமியாரென்றல் தகாதோ! வயிற்றுச் சாமியார்களைத்தான் நீர் சாமியார்களென்று சொல்லுவீர்போலும்.

வேறொருவர் — இதோ போகின்றானே அவன் கூட்டாளி யொருவன், அவனைக் கேளுங்களேன்.

முத. — அடே அண்ணாமலை, இங்கே வாடா, திருப்புன்கூர் போனாயாமே, அங்கே என்ன சமாச்சாரம்.

அண்ணாமலை — நந்தண்ணன் எங்களை இழுத்துக் கொண்டு போனார். கோபுர வாயிலின் எதிரே நின்றுகொண்டு 'காணாததைக் கண்டேன், பெறாததைப் பெற்றேன்,' என்று சொல்லிக் கொண்டு அங்கேயே வெகுநேரம் விழுந்துகிடந்தார். பிறகு ஊருக்கு வந்துவிட்டோம். இது தான் எனக்குத் தெரியும்.



முத. — அதல்லடா, நந்தன் குளம் வெட்டினானாமேடா!

அண். — கனவில் நாங்களும், இன்னும் பலரும் குளம் வெட்டினாப்போல் இருந்தது அதுதான் எனக்குத் தெரியும்.

முத. — கோயில் நந்தி திரும்பிற்றாமே, அது தெரியாதா?

அண். — எனக்குத் தெரியாதே, நான் பார்க்கவில்லையே!

முத. — என்னடா, இதுவும் கனவு கண்டதுபோல் கூட இருந்ததில்லையோ?

அண். — என்னமோ எனக்கு ஞாபகம் வரவில்லை —

முத. — அடே, அதிருக்கட்டும், நந்தனுக்கு மூலஸ்தானம் தெரிந்ததா?

அண். — ஆமாம், நாங்களுந்தான் பார்த்தோம்.

ஒருவர் — நந்தி திரும்பினால்தான் மூலஸ்தானம் தெரியும் என்று அவன் கண்டானா! அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். இதோ வருகிறாரே, நமது ஐயர், நந்தன் சாமியார், அவரைக்கேட்டால் எல்லாந் தெரிந்துவிடுகிறது, ஏன் இவ்வளவு கஷ்டம்?

முத. — சுவாமி, நமஸ்காரம், வாருங்கள்.

அங். — மகாராஜனுமிரும், என்ன கூட்டம், ஏதோ பெரிய விசேஷம்போல் இருக்கின்றது!

முத. — அப்படிப்பட்ட விசேஷம் ஒன்றுமில்லை. உம்முடைய விசேஷந்தான் பெரிதாயிருக்கின்றது!

அங். — அதென்ன, உங்களுக்கில்லாத விசேஷம் எனக்கென்ன வந்துவிட்டது! உங்களைப்போல் ஊரில் நானும் ஒரு குடி.

முத. — அதெப்படி, எல்லாருடைய வீட்டிலும் நந்தனா அடிமைவேலை செய்கின்றான்?

அங். — என்னிடம் நந்தன் இருப்பது அவ்வளவு விசேஷமா? அவாளவான் ஆட்கள் வேலை செய்கிற தில்லையோ, வெறுமனே படிகொடுத்து விடுகிறார்கள்?

முத. — இந்த ஊரில் எந்த ஆள் நாலுகாணி வேலியை ஒரே இரவில் அறுத்து அடித்துவிட்டான்?

அங். — அதற்கென்ன வேண்டியவர்களைக் கூட்டிக்கொண்டு வேலையை நடத்திவிட்டான். மற்றவர்கள் அவ்வாறு செய்யக் கூடாதா — அது அவ்வளவு சாமர்த்தியமா?

முத. — அதிருக்கட்டும், நந்தனைப் பற்றி ஏதோ அதிசயமான விஷயம் ஒன்று பேசிக்கொள்கிறார்களே, அது என்ன தங்களுக்குத் தெரியுமோ?

அங். — ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள் ஜனங்கள். ஓரிரவில் குளம் வெட்டினான். நந்தன் என்கிறார்கள். கோபுரத்தண்டை இருந்துகொண்டே மூலஸ்தான தரிசனங் கண்டானாம், நந்தி தானே ஒதுங்கி விட்டதாம். நானும் கேள்விப்பட்டதுதான்.



முத. — நந்தன் வாயிலிருந்து ஒன்றும் வரவில்லையோ!

அங். — அவனை நான் கேட்கவுமில்லை. அவனுக ஒன்றும் என்னிடம் சொன்னதுமில்லை.

முத. — நீர் இவைகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

அங். — அவ்வாறிருந்தாலும் அதிசயமென்ன? நந்தன் ஒரு பக்தனல்லவா? இவைகள் அவன் விஷயமாய் நடந்திருந்தால் அது தகாதோ? நமது நடராஜப் பெருமான் என்ன! அடியார்க்கு எளியவன் தானே! இம்மைக்குத்தான் குலப் பயித்தியம் உண்டு, மறுமையில் அப்படிப் பட்டது ஒன்றுமில்லையே! மிருக பட்சிசாதிகளும் மோட்சம் பெற்றதாகக் கேள்வி யில்லையோ! நந்தன் மனிதப் பிறப்பிற் சேர்ந்தவனன்றோ!

ஒருவர் — முதலியாரே? நமதையர் வெகு பக்குவசாலி யாயிற்றே! இப்படிப்பட்ட விஷயங்களை அவர் காதில் போட்டுக்கொள்ளவே மாட்டார், காரியக்காரர் அல்லவோ அவர்! இருக்கட்டும், நாளையதினம் நடுவீதியில் ஏதோ பிரசங்கமாமே. அத்தெருக்காரர் ஒருவர் என்னைச் சிறிது தொகைக்குக் கையொப்பங் கேட்டார்; நான் அப்படியே தந்தேன். நல்ல புராணீகராமே! நாளையதினம் எல்லோரும் வாருங்கள், ஐயரே நீரும் வாரும், மறந்து போகாதீர்.

அம். — பார்க்கலாம், போய்வருகிறேன்.

முத. — நாளையதினம் தாங்களும் வாருங்கள். புராணம் விமரிசையாய் இருக்குமென்கிறார்கள்!

மறுநாளிரவு அரை ஜாமத்துக்கெல்லாம் அவ்வூரார் யாவரும் வந்து நடுத்தெருவில் தெருத் திண்ணை விசாலமாக விருந்த ஒரு வேதியர் வீட்டண்டை கூட்டங் கூடினார்கள். ஒரு புத்தகம் கைக்கொண்டு பின்னே ஒருவர் தொடர்ந்து வர, பௌராணிகரானவர் உள்ளே யிருந்து வந்து தெருத் திண்ணையில் யாவரும் எழுந்து நமஸ்கரிக்கத் தாமும் கூட்டத்துக்குத் தக்க மரியாதை செய்துவிட்டுத் தமக்கிட்டிருந்த பீடத்தில் அமர்ந்தனர். கையேட்டுக்காரரும் அவரது இடப் பக்கத்தில் அவர் முகம் பார்த்துத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்தார். ஜனங்களெல்லாம் புராணிகர் முகத்தைப் பார்த்தபடியே இருந்தனர். அவர் தோத்திரஞ் செய்து சிதம்பர மான்மியத்தைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். அதன் சாராம்சம் வருமாறு:

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## சிதம்பர மான்மியம்

அன்புடையீர்! ஆதனூர் வாசிகாள்! இன்று அடியேன் இங்குப் பேச எண்ணியிருக்கும் விஷயம் சிதம்பர மான்மியம் என்பது: அதாவது இப் பதிக்கு அருகேயுள்ள, இங்குள்ள யாவருக்கும் தெரிந்த, சிறந்த தலமாகிய சிதம்பரம் என்னும் மஹா நகரத்தின் பெருமை. இச் சிதம்பரத்தைத் தில்லையென்றும் கூறுவார்களல்லவா? நம் சிவ பெருமான் அசையும் பொருள், அசையாப் பொருள் ஆகிய எப்பொருளின் கண்ணும் எவ்விடத்திலேயும் இருக்கின்றான் என்று பெரியோர் பேசுகின்றனர். இதன் உண்மையை அறிய யாவராலும் இயலுமா? ஆதலினால் எளிதில் அவர் அடிகளை அடைய முடியாதன்றோ? இதனை அச் சிவ பெருமானே அறிவர். அவர் மனிதர் தம்மை வழிபட்டு நற்கதி அடையும் பொருட்டுப் பலப் பல பரிசுத்த ஸ்தானங்களை இப் பூமியின் கண் ஏற்படுத்தி யுள்ளார். அவைகளில் அறுபத்தெட்டுத் தலங்கள் மிக மேம்பட்டவை. அவைகளுள்ளும் திருவாரூர், காசி, சிதம்பரம் என்னும் மூன்றுமே மிகச் சிறந்தன. ஆரூரில் பிறக்க முக்தி, காசியில் இறக்க முக்தி, தில்லையைக் காண முக்தி என்று புராணங்களிலே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றது.

திருவாரூரில் பிறத்தல் என்பது ஒருவன் எண்ணிச் செய்யும் காரியமா? அதற்குப் பூர்வ புண்ணியம் இருக்கவேண்டு மல்லவோ? காசிக்குச் சென்று அங்கு இறக்கவேண்டுமென்று ஒருவன் எண்ணுவானாயின் அது கைகூடி வருமா? அத்துணைத் தூரம் சென்று அதனை அடையக் கையிற் பொருள் கிட்டுமா? பொருள் கிட்டுமேனும் வழியில் இறவாது சென்று சேர்தல் இவன் இஷ்டத்திற்கு உட்பட்டதா? இதற்கும் அவன் கொடுத்துவைத்திருக்க வேண்டாமா? இவ்விரண்டைக் காட்டிலும் தில்லையைத் தரிசித்தல்

என்பது மிகச் சுலபமானதல்லவா? அத் தலம் இவ் வாதனூருக்குச் சமீபத்திலிருப்பதால் இவ் வூர்வாசிகளாகிய நீங்கள் மிகச் சிறந்த புண்ணியசாலிகளன்றோ? மேல் காட்டிய காரணங்களால் சிதம்பரமே எல்லாத் தலங்களிலும் சிறந்ததாம்.

மேலும் சிதம்பரத்திலேயே பிறந்து, சிதம்பரத்திலேயே இருந்து, நடன சபாபதியின் தரிசனம் நாளும் கண்டு, அங்கே வசித்து இறத்தல் ஆனந்த முத்தியைக் கொடுக்கும் என்று அறிவுடை முதியோர் ஆங்காங்கு அப் பதியின் சிறப்பைப்பற்றிச் செப்பியுள்ளார்கள். மேலும் பஞ்ச லிங்கங்களில் மண் இலிங்கம் காஞ்சிபுரத்திலும், நீர் இலிங்கம் திருவானைக்காவிலும், நெருப்பு இலிங்கம் திருவண்ணாமலையிலும், காற்று இலிங்கம் காளத்தியிலும், வெள்ளிடை இலிங்கம் இச் சிதம்பரத்திலும் உள்ளன. மண், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பூதங்களும் ஆகாயத்தில் அடங்கியுள்ளன அல்லவா? ஆகையால் அவ் வாகாய இலிங்க ஸ்தானமாகிய சிதம்பரமே தலங்கள் எல்லாவற்றிற்கும் தலைமை பெற்று விளங்குகின்றதென்பதற்கு வேறு காரணங்களும் வேண்டுமோ? மேலும் அங்கு சிவபெருமான் நடனம் செய்துகொண்டிருப்பது அவனுடைய ஐந்து சக்திகளாகிய ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவைகளைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது என்பர் பெரியோர். இவைகளின் விவரங்களையெல்லாம் மஹான்கள் வாயிலாகக் கேட்டு உணரவேண்டும்.



சிதம்பரத்தில் இன்னொரு விசேடம் உண்டு. அப் பதியின் கண் வாழும் அந்தணர்களுக்குத் தில்லைவாழந்தணர்கள் என்று பெயர். இவர்கள் மூவாயிரம் பேர். இவர்கள் அப் பதியிலேயே வாசம் செய்துகொண்டு கனகசபையின் கண்ணே ஆனந்தத் தாண்டவம் இயற்றி வீற்றிருக்கும் நடராஜப் பெருமானை நாளும் தரிசித்துத் துதித்து வணங்கிப் பேரின்பம் கொண்டு வாழ்வர். நடராஜப் பெருமானே அம் மூவாயிரவர்களில் ஒருவராக இருந்து வருகின்றார் என்று தொன்றுதொட்டுச் சொல்லப்பட்டு வருகின்றது. இவர்கள் வேதங்களையும், ஆகமங்களையும் ஓதி உணர்ந்து, அவைகளிற் கண்ட விதிவழி தவறாது ஒழுகும் தவசிகள். இவர்களை வழிபடுதல் ஈசனை வழிபடுதல் போலாம். இவர்கள் திருநீற்றையும், திருமணியையும் தமக்குற்ற ஆபரணங்களாகக் கொள்பவர்கள். கோயில் திருப்பணியையே தமக்கேற்ற பணியாகக் கொண்டு நாடோறும் தொண்டு செய்பவர்கள். காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் நாள் வேளை தவறாமல் நலமுடன் ஓமம் செய்து உலகத்தாருக்குச் சகல சம்பத்துக்களும் உண்டாவதாக வென்று உமாபதியை உருக்கமுடன் துதிப்பவர். ஓதல் - ஓதுவித்தல், ஓமம் செய்தல் - செய்வித்தல், ஈதல் - ஏற்றல் என்னும் அந்தணர்க்குரிய ஆறு தொழில்களையும் அசையாது நடத்தி உலகத்துக்கு ஒரு துன்பமும் வாராது காப்பவர். திருநீற்றையே செல்வமாகக் கொண்டவர். சித்தத்தைச் சிவன் பாலே வைத்தவர். சமய ஆசார ஒழுக்கங்களையும், சந்தியாவந்தனம், பூஜை, ஜபம், ஓமாதிகளையும் அனுஷ்டித்து, யோகத்தில் முற்றி, கடவு

ளின் உண்மை ஞானத்தை உணர்ந்தவர். தானத்திலும் தவத்திலும் வல்லவர்களாய்த் தகுதியையே நாடுபவர். உலகம் புகழ்ந்து போற்ற, மானத்தையும் பொறுமையையும் மேற்கொண்டு மனைவியருடன் இருந்து இல்லறத்தையே நல்லறமாகக்கொண்டு வாழ்பவர். செம்மைச் சிந்தையும், தெய்வபக்தியும் உற்று, இம்மையிலேயே சிவபெருமான் அருள் பெற்று தம்மை யொத்தவர்கள் தாங்களே என்னும்படி தலைசிறந்த அந்தணர்கள் இவரேயாம்.

ஒரு மஹான் தில்லைவனத்தை அடைந்து சிவலிங்க பூஜை செய்துகொண்டு வந்தார். அவர் பரிசுத்தமான பூக்களைக்கொண்டு சிவபெருமானை அருச்சிக்க எண்ணினார். 'பூக்களை விடிந்தபின் எடுத்தால் வண்டூதும், விடியுமுன் எடுக்கலாமென்றால் பழுது தெரியாது, மரங்களில் ஏறிப் பறிக்கலாம் என்றாலோ கை கால் வழுக்கும்' என்று கவலையுற்றார். வேண்டியவர்கள் வேண்டியபடியே அருளும் சிவபெருமான் எழுந்தருளி வந்து அவர் புலிக் கால்களும், புலிக் கைகளும், புலிக் கண்களும் பெறும்படி அருள் செய்து மறைந்தனர். அம்முனிவர் அன்று முதல் வியாக்கிரபாதர் என்னும் பெயர்பெற்று, கிளைப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ ஆகிய நால்வகைப் பூக்களையும் கொண்டு சிவபூஜை செய்துகொண்டு வந்தனர். சிவபெருமானுடைய திரு நடனத்தைக் கண்டு தரிசிக்கவேண்டும் என்னும் ஆசையால் அளவற்ற காலம் அத் தில்லையில் அச் சிவபூஜைப் பணியிலேயே விடாது வாழ்ந்து வந்தனர். அத் தில்லைவனத்தின் கண்ணே மற்றொருபால் பதஞ்சலி என்னும் முனிவர்



ஒரு குளக்கரையில் ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்துச் சிவபூஜை செய்துகொண்டு வியாக்கரபாதரைப் போலவே திருநடன தரிசனத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார். கணக்கற்ற வருடங்கள் சென்ற பிறகு ஒரு தைப் பூச தினத்தில் அத் தில்லைவனத்தில் பலகோடி தேவர்களும் தில்லைவாழ் அந்தணர்களும், வியாக்கரபாதர் பதஞ்சலி முனிவர்களும் தமது அருளால் ஞானக் கண்கள்பெற்றுப் பேரானந்தம் அடைய சபாநாயகர் திருநடனம் செய்தருளினார். அதை யாவரும் கண்டு மகிழ்ந்து பூரண சுகம் பெற்றனர். பதஞ்சலி முனிவர், 'எம்பெருமானே இந்த ஞான சபையிலே இன்று முதல் எக்காலமும் இந்தத் திருநடனத்தை யாவருக்கும் புலப்படுத்தி அருளல் வேண்டும்,' என்று வேண்டிக்கொள்ள, அதனைச் சிவபெருமான் அங்கீகரித்து அருளினர். தேவர்களே அந்த இடத்தை வளைத்து, தங்கத்தினாலே ஒரு மகாசபை நிருமித்தார்கள். சிவபெருமான் அன்று முதல் தேவர்களும் வியாக்கரபாதர் பதஞ்சலி முனிவர்களும் வணங்க, அக் கனகசபையிலே திரு நிருத்தத்தைச் செய்துகொண்டு வருகின்றார். பக்திமான்கள் எவர்களானாலும் அந் நடனத்தை நாளைக்குங் கண்டு தரிசித்து இப் பிறப்பிலேயே ஒப்பிலா ஆனந்தம் பெற்று அப்போதே அப்பெருமான் பாதத்தை அடையலாம். இங்கே யிருப்பவர்களில் எவரேனும் பூர்வ புண்ணியம் பெற்றிருப்பாராயின் அவரும் அந்த அற்புதப்பதவியை அடைய அருகர் ஆகாமற் போகமாட்டார். இது சத்தியம்! சத்தியம்!!

மேலும் இச் சிதம்பரத்திலே தீர்த்தங்கள் பத்து உள்ளன. I-வது. சிவகங்கை:— இது கனக

சபைக்கு வடக்கே யுள்ளது. இதில் மூழ்கி எழுவது பெரும் புண்ணியம். அதிலும் மார்கழித் திருவாதிரை, மாசிமகம் ஆகிய இத் தினங்களில் ஸ்நானஞ் செய்வது மகா விசேடம். அவ்வாறு செய்பவர்கள் தாம் எண்ணிய கருமங்களெல்லாம் திண்ணமாகச் சித்திக்கப் பெறுவர். 2-வது. குய்ய தீர்த்தம்:— இது திருக் கோயிலுக்கு வடக்கே யுள்ளது. இதில் வருணன் ஸ்நானஞ் செய்து குருவைக்கொன்ற பாவத்தை ஒழித்தான். ஆகையால் இதனை பாசமறுத்த துறை என்று சொல்வார்கள். 3-வது. புலிமடு:— இது திருக் கோயிலுக்குத் தெற்கே யுள்ளது. 4-வது. வியாக்கரபாததீர்த்தம்:— இது திருக் கோயிலுக்கு மேற்கே யுள்ளது. இது வியாக்கரபாத முனிவர் இருந்து பூஜை செய்த இடம். இவைகளே யன்றி 5-வது - அனந்ததீர்த்தம், 6-வது - நாகசேரி, 7-வது - பிரமதீர்த்தம், 8-வது - சிவப்பிரியை, 9-வது - திருப்பாற்கடல், 10-வது - பரமானந்த கூபம் ஆகிய தீர்த்தங்களும் உண்டு. திருவாதிரை முதலிய திரு நட்சத்திரங்களில் சிவபெருமான் சிவ கங்கை முதலிய பத்துத் தீர்த்தங்களி லிடத்திலும் எழுந்தருளித் திருவருள் செய்வர். இவைகளில் ஸ்நானஞ் செய்து நடராஜப் பெருமானைச் சேவிப்பது மகா புண்ணியமாம்.

நண்பர்களே! அடியேன் உங்களை இவ்வளவு நேரம் இங்கு இருக்கச் செய்ததற்கு அடியேனை மன்னிக்கவேண்டுகின்றேன். சிதம்பரத்தின் பெருமைகளை எல்லாம் ஒன்று விடாது எடுத்துச் சொல்லப் புகின் இப்படிப்பட்ட பிரசங்கங்கள் எத்தனையோ



கொள்ளும். அவ்வாறு செய்வதற்கும் அற்பனாகிய அடியேனால் இயலாது. ஏதோ இப்பதியிலுள்ள புண்ணியவான்கள் கோரிக்கையின்படி அடியேன் சிற்றறிவிற்குத் தக்கபடி செப்பிய சில விஷயங்களைக் கோதொழித்துக் கொள்வீர்களாக. ஜனங்கள் தூரத்திலுள்ள இடங்களுக்குத் தீர்த்தயாத்திரையோ, ஸ்தல யாத்திரையோ செய்வார்களே யொழிய, அருகில் உள்ள அருமையும் பெருமையும் வாய்ந்த பரிசுத்த பதிகளுக்குச் சென்று தரிசித்துச் சிவப்பேறு அடைய மாட்டார்கள். இது உலகத்தில் சகஜம். ஆனால் நீங்கள் இப்போது இவ்விடத்தில் சிதம்பர மான்மியத்தைப் பற்றிக் கேட்ட பின்னும், அவ்வாறு செய்வீர்களென்று கொள்வதற்கு இட மிராதென்று நினைக்கின்றேன். இவ் வாதனூரி லுள்ள ஒவ்வொருவரும் பிரதி வருஷமும் மார்கழி மாதம் திருவாதிரைத் திருநாள் அன்று சிதம்பரம் சென்று திருநடனத்தைத் தரிசித்துச் சிவப்பேற்றைப் பெற்று, ஜன்மப் பிணியற்றுப் பேரின்ப வாழ்வைப் பெற வேண்டும் என்பது அடியேனது அன்பார்ந்த கோரிக்கை.

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை அருமறையின்
அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

திருச்சிற்றம்பலம்

மேற்படி பிரசங்கத்தைக் கேட்டு அக் கூட்டத்தின்கண் ஆநந்தமடையாதவர் ஒருவருமில்லை. ஆதனூரிலிருக்கும் ஆண் பெண் அடங்க எல்லாரும் வந்து கேட்டுச் சிதம்பர மான்மியத்தைப் பற்றிய சிந்தையராகவே அவரவரில்லம் ஏகினர். நமது நந்தனாரும் யாவரும் அறியாத ஓரிடத்தில் ஒளித்திருந்து கேட்டுக்கொண் டிருந்தனர். பிரசங்கம் முடிந்தபின் அவர் சரேலென்று வீட்டுக்குப்போய்ப் படுக்கையில் இருந்துகொண்டு சிந்திக்கலாயினர் :—

சிதம்பரம் சிவபெருமான் வீடாமே! பூமிக்கு மத்தியிலுள்ள தில்லை வனம் சிவபெருமான் ஆநந்த நடனம் புரியும் இருதய ஸ்தானமாமே! அந்த நடனம் ஐந்து தொழிலையும் நடத்துமாமே! அதுவே பந்தங்களை யெல்லாம் அறுக்குமாமே! அது கான்போருக் கெல்லாம் முத்தியைக் கைகூட்டுமாமே! சிதம்பரம் போகா திருப்பேனோ! ஜென்மத்தை ஒழிக்கா திருப்பேனோ! தில்லையைக் காணா திருப்பேனோ! தொல்லையை ஒழிக்கா திருப்பேனோ! சிதம்பரம்போக வேண்டும், தில்லையைக் காண வேண்டும், தில்லைவாழந்தணர் தம் அடி பணிய வேண்டும்! கோபுர தரிசனம் காண வேண்டும், கோயிலைச் சுற்றி வரவேண்டும், ஆநந்த நடனம் காண வேண்டும், ஆநந்த பாதம் அடைய வேண்டும்! என்ன சிந்தனை வேறே எனக்கு? அந்தணர் வேலை முடிப்பேன், அவரடி பணிந்து கேட்பேன், உடனே புறப்படுவேன், புறப்படுவேன், புறப்படுவேன்.

மறுநாள் முதல் அவருக்குச் சிதம்பரம் போக வேண்டுமென்கிற சிந்தனையே பெரிதாயிற்று. ஆயி





நந்தனார் சிதம்பரம் செல்ல உத்தரவு கேட்கிறார்.

னும் தாம் கடைச் சாதியில் பிறந்தவ ராகையால் அவ்வாறு சென்றும் சிற்றம்பல தரிசனம் கிடைக்காதாகையால் ஆங்குச் சென்றும் பயனில்லையே என மனமுலைந்தார். ஆயினும் அவ் வாசையானது தன் மனத்தை உந்தித் தள்ளுதலால் 'நாளைப் போவேன்,' 'நாளைப் போவேன்' என்று சொல்லிக்கொண்டு ஆறுதல் அடைவார். நாளேற நாளேற அவருக்கு அதுவே ஒரு பைத்தியமாய்விட்டது. நந்தனாருக்கு 'நாளைப் போவேன்' என்பது நமச்சிவாய மந்திரமாய்விட்டது. நந்தனார் மறந்தாலும் 'நாளைப் போவேன்' என்பதை அவர் நா மறக்கவே யில்லை. வீட்டி லிருந்தாலும், வயலி லிருந்தாலும் 'நாளைப் போவேன்,' 'நாளைப் போவேன்' என்று சொல்லிக்கொண் டிருப்பார்.

நந்தனார் இவ்வாறு சிதம்பரப் பைத்தியங் கொண்டு அதே சிந்தனையாய் அந்தணர் வேலையிலும் சிறிது அசைவுறலாயினார். மேழியைப் பிடித்தபடியே மேலே பார்த்துக்கொண் டிருப்பார். நாற்றைப் பிடுங்கினபடியே நகை புரிந்துகொண் டிருப்பார். வெட்டின இடத்திலேயே அண்டை வெட்டிக்கொண் டிருப்பார். பாய்ந்த நிலம் பாய்ந்தபடியே இருக்கும். காய்ந்த பயிர் காய்ந்தபடியே காணும். கழனிக்குச் சென்றால் கழனியிலேயே இருப்பார். வீட்டுக்கு வந்தால் வீட்டிலேயே தங்கிவிடுவார். இதனால் அந்தணரும் நந்தனார்மீது சிறிது வெறுப்படைந்தார். நந்தன் நடவடிக்கைகளைப் பற்றி அந்தணர் ஒருநா ளிரவு சயனத்தில் சிந்திக்கலாயினார் :— 'நந்தனுக்குச் சிவபத்தி மிகுந்துவிட்டது, பயித்தியக்காரனைப்போ லாய்விட்டான். இனிமேல் அவன் பயிர் வேலைக்கு உதவமாட்டான். ஆயினும் அவனை "வேலையை விட்டுப்



போய்விடு" என்று சொல்லி யனுப்பிவிடுவதற்கு எனக்கு மனந் துணியவில்லை. அவனைக் கடுகடுத்துப் பேசி வேலை வாங்குவதற்கும் எனக்குத் தைரியம் வரவில்லை. அவனை நேரில் காணும்போது அவனிடம் எனக்கு அன்பும் ஆசையும் உண்டாகிறதே யொழிய அவனைச் சீறிச் சினந்து பேசுவதற்கு எண்ணமே உதிக்கவில்லை. இது அச் சிவபெருமான் செயலே என்று நினைக்கின்றேன். நிற்க, முன்போல் பயிர் வேலை ஒன்றும் சாயவில்லை. பயிர்களெல்லாம் தாறுமாறாய்க் கிடக்கின்றன. பயிரின்மீது எனது கண்ணோடாதபடியால் இவ்வளவு நஷ்டம் நமக்கேற்பட்டிருக்கின்றது. பத்துக் காணி வேலி சேறுழுதபடியே அழுகிப்போய்க் கிடக்கின்றது. நாற்றோ மிகவும் முற்றிப் போய்விட்டது. ஒரு மாதத்துக்கு முன்னமேயே அதை நடவில் போட்டுவிட் டிருக்கவேண்டும். என்னமோ வேலை நடக்கிறதென்று முட்டாள்தனமாயிருந்துவிட்டேன். இப்போது என் செய்வேன்! நாளைக் காரம்பித்தாலும் நிலங்களை யெல்லாம் நடவேற்றுவதற்குப் பத்துப் பதினைந்து நாளாகுமே. முற்றின நாற்றாகையால் அப்படிச் செய்தும் அப்பிரயோஜன மாய்விடுமே. பத்தனாலல்லோ நான் பயிரிழந்தவ னாயினேன். நடராஜன் எந்தவழி விடுவானோ தெரியவில்லை.' என் றிவ்வாறு சிந்தனையி லிருக்கும்போது, யாரோ கதவைத் தட்டுகிற சத்தங் கேட்டு அந்தணர் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார்.

நந்தனார் — சுவாமி உமக்குக் கோடி நமஸ்காரம்.

அந்தணர் — என்னடா, ஒன்றா, கோடி யாய்விட்டது?

நந். — நாளை இரவு நடராஜன் அபிஷேகம், விடிய தரிசனம். நான் உடனே சிதம்பரம் போக வேண்டும்.

அந். — நந்தா! நான் உன்னையே நம்பியிருந்தேன். கடைசியில் நட்டாற்றில் விட்டுவிட்டாய்! பயிர் பச்சைகளெல்லாம் பாழாய்ப் போய்விட்டன! கண்டபடி நீரைக் கட்டி புன்செய்ப் பயிர்களெல்லாம் அழுகிப்போய்விட்டன. நன்செய்ப் பயிர்களெல்லாம் நீரின்மையால் தீய்ந்துபோய்விட்டன. நாற்றங்காலில் நாற்று முற்றிப்போய்விட்டது. பத்துக் காணி வேலி சேறழுகிக் கிடக்கிறது. இரண்டு மூன்று நாளாய் இதுவே கவலை. நீ எப்போது பயிர்மேல் போகிறாயோ எனக்குத் தெரியாது. நான் போகிறபோது உன்னைக் காணோம். இந்த ஸ்திதியில் சிதம்பரம் போக வேணுமென்கிறாய். எப்படி மனது வந்து கேட்கிறாயோ தெரியவில்லை! முன் சொன்னதையெல்லாம் மறந்துவிட்டாய், எனக்கிருந்த ஐயம் ஈடேறிவிட்டது. ஊரார் கண்ணே எனக்குப் பட்டுவிட்டது. நான் என் சொல்வது. உன்னை என் பிள்ளைபோல் பாவித்திருந்தேன். நீயும் அப்படித்தான் இருந்தாய். என் செய்யலாம்! எல்லாம் ஈசன் செயல். பத்துக் காணி வேலி நடவேறினால்தான் என் வாயால் நடராஜ தரிசனத்திற்கு உத்தரவு கொடுப்பேன். பிறகு உன திஷ்டம். எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. எனக்கு மயக்கமாகவிருக்கிறது. நீ போ, நான் படுக்கைக்குப் போகவேண்டும்.





நந்தனார் அடிமைத்தனம் நீங்கி சிதம்பரம் நோக்கினது.

என்று சொல்லிக்கொண்டே ஐயர் தெருக் கதவைச் சாத்திக்கொண்டு போய்ப் படுத்துக்கொண்டார். நந்தனார் சேற்று வயலண்டை சென்று ஒரு வரப்பின்மேல் உட்கார்ந்து கண் மூடிக்கொண்டு நடராஜப் பெருமானைத் தியானித்தபடியே இருந்து விட்டார்.

அருணோதய மாயிற்று. நந்தனார் கண் விழித்துப் பார்த்தார். வெளியெல்லாம் நடவேறியிருந்தது. இது நடராஜப் பெருமான் திருவருள் என்றறிந்த வராய் ஓடோடியும் வந்து அந்தணரை எழுப்பிக் கொண்டு போய் நடவேறிய வெளியைக் காண்பித்தார். பார்த்தார் அந்தணர், தன்னை மறந்தார், நந்தனார் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தார். இதைக் கண்ட நந்தனார் அந்தணரை அதட்டி யெழுப்பி 'என் செய்தீர், அடிமையைப் பழிக் காளாக்கலாமோ! உலகத்தார் அடியேனை ஏசார்களா! இந்தக் கொடுமைக்கு யானென் செய்வேன்! இதற்கு விமோசனம் யாதோ!' என்று சொல்லிக்கொண்டே அடியற்ற மரம்போல் அந்தணர் காலில் விழுந்துவிட்டார்.

அந்தணர் 'நந்தா! நந்தா! எழுந்திரு! எழுந்திரு!' என்று கதறிக் கூப்பிட்டுச் சொல்ல, நந்தனார் எழுந்து அந்தணரைத் தலைவணங்கி நமஸ்கரித்தார். அப்போது அந்தணர், 'நந்தனாரே! என்னைப் பிராமணன் என்று சொல்வதடாது, உம்மையே பிராமணன் என்று சொல்லவேண்டும். ஏனெனில் பிரம ஞான முடையவர் நீரே; இதுமுதல் நீர் எனக்கு அடிமையல்ல, நானுமக்கு ஆண்டையல்ல. நடராஜப் பெருமானே உமது ஆண்டையாவன், அவனுக்கே



நீர் அடிமையாவீர். இந் நிமிஷ முதல் நீர் உமதிஷ்டப்படியே எங்கு வேண்டினும் செல்லலாம்; அடியேன் நமக்கு உத்தரவளிக்க வல்லேனல்லேன். இதுவரை அடியேன் உம்மை அடிமையாகக் கொண்டிருந்த ஓர் அறியாத தன்மைக்கு மன்னிக்கும்படி அடிபணிந்து வேண்டிக் கொள்கின்றேன்,' என்று மறுபடி காலில் விழுந்தெழுந்து நமஸ்கரித்துக்கொண்டே வீட்டுக்குப் போய்விட்டார்.

## 7. ஒளியி லொளித்தான்

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"

வயலில் இருந்தபடியே நந்தனார் சிதம்பரம் போகப் புறப்பட்டு விட்டார். முக்காதவழி தூரத்தையும் முந்தி முந்தி நடக்கலாயினார். நடையாய்ப் போவார் சில தூரம், ஓடுவார் சில தூரம். இப்படி ஓட்டமும் நடையுமாய்க் காட்டகங்களையும் காறுகளையும் மலை குன்றுகளையும் தாண்டிச் செல்வாராயினார். செல்லும்போது சிவபெருமான் திருநாமங்களை ஓயாமல் சொல்லிக்கொண்டே போவார். சிதம்பரத்தைப் பற்றித் தானாகவே பேசிக் கொண்டே போவார். மேலும்,

சிதம்பர தரிசனம்
தில்லை தரிசனம்
நடராஜ தரிசனம்
நல்லோர் தரிசனம்
அந்தணர் தரிசனம்
அடியார் தரிசனம்
கோபுர தரிசனம்

கண்டால் தரிசனம்
உண்டாம் தரிசனம்
இணையடி தரிசனம்
நடன தரிசனம்
துணையடி தரிசனம்
பொருந்தும் தரிசனம்
முக்கணன் தரிசனம்

கோயில் தரிசனம் மோட்ச தரிசனம்
என்னென்ன தரிசனம்! தரிசனம்! தரிசனம்!

என்று இவ்வாறெல்லாம் இயம்பியபடியே செல்வார். கடைசியாகக் கொள்ளிடக் கரை யணைந்தார். கோபுரங் களைக் கண்டு பணிந்தார். 'கண்டேன் கலிதீர்ந்தேன்' என்பார். 'கவலைக் கடலைக் கடந்தேன்' என்பார். 'தஞ்சமென் றடைந்தேன்' என்பார். இப்படிச் சொல்லிக்கொண்டே போய்த் தில்லை என்னும் சிதம்பரத் தெல்லை சேர்ந்தார். 'இதுதானோ தில்லை' யென்பார். 'என்னை யழைத்தது இதுவோ' வென்பார். 'தில்லையைக் கண்டபோதே பிறவி யில்லை' யென்பார். 'தொல்லையைத் தொலைத்தேன்' என்பார். 'இதுவே எனதாண்டவன் இருப்பிட' மென்பார். 'மறையோ ரிருக்கும் மடமோ' என்பார். 'முனிவர் வாழும் மேலிட' மென்பார். 'தொண்டர் வாழும் தொல் லிட' மென்பார். 'எல்லாத் தெய்வமும் இருக்கு மிட' மென்பார். 'இதைப் பாராதவரே பாவி' யென்பார். 'சிதம்பரம் காணார் சிவலோகங் காணார்' என்பார். 'இதைக் காணாத ஜென்மம் என்ன ஜென்மம்' என்பார். 'பத்தி பண்ணாதவன் பாமரன்' என்பார். 'இதைக் காணாத கண் என்ன கண்' என்பார். இவ்வாறு சொல்லிக்கொண்டு தில்லை வீதி களிற் றிரிவாராயினார். வீதி வலம் வரும்போது, 'புலையனாகப் பிறந்தேனே! புண்ணியம் செய்யாமலிருந் தேனே! சந்நிதி தேடி வந்தேனே! சரணமென் றுன்னை அடைந்தேனே! அடியேனிங்கிருக்கலாமோ? அடிமைப்பறையன் வரலாமோ? அரகரா சிவசிவா என்னலாமோ? வேள்விப் புகையைக் காணலாமோ? வெகு ஜனத்துடன் கூடலாமோ? மணியாடு ஒலியைக்



கேட்கலாமோ? பெரியோ ரிருக்கு மிடத்தில் பேயன் இருக்கலாமோ'! என்று நந்தனார் தில்லைவாழ்ந்தணர் திருவீதியை அடைந்தார். முத் தீக்களின் புகை மேலோங்கி ஓடுவதைக்கண்டார். அகத்தில் ஆநந்தங் கொண்டார். 'எல்லாச் சாதியினும் பொல்லாச் சாதி யேன் ஆயினேனே' யென்பார். 'இந்தச் சடலம் வந்த வாறு அறிகிலேனே' யென்பார். 'தில்லை யம்பலத் தானைச் சந்ததமும் சிந்தித்துத் தரிசிக்கப் பேறு பெற்றே னில்லையே' என்றார். 'ஆடு நடனங் கண்டு பாடிப் பணியத் தேடிக்கொண்டே னில்லையே' என்றார். 'கனகசபாபதி தரிசனம் கண்டு களிக்கப் பண்டை விதி யைப் பண்ணிக்கொள்ள வில்லையே' என்றார். 'ஜனன மரண சம்சாரங்களை நீக்கத் திருவடி நிழலை அடைவது எந்நாளோ' என்றார். இவ்வாறு சொல்லிக்கொண்டு அவ் வீதிகளுக் குள்ளே செல்லாமல் அருகிலிருந்த ஒரு குளக் கரையில் வந்து உட்கார்ந்து கொண்டார். அங்கே தன் சாதியின் இழிவை நினைந்து நினைந்து கண்ணீருங் கம்பலையுமாய்ப் பிரலாபிக்கின்றார் :—

"இந்த ஜன்மம் எனக்கு வந்தவா றென்னோ! இந்த ஜென்மம் கெட்டதல்லவோ! எவ்வாறு கரை யேறுவேனோ! சிதம்பரத்தான் சித்தம் என்னமோ! தில்லைத் தலத்தைக் கண்டேன்; தரிசனம் பண்ணாமல் போவேனோ! பறையன் என்ற சொல் போகுமோ! இன்னும் பாரில் வந்து பிறக்க லாகுமோ! அம்பலத் தான் எண்ணம் என்னமோ! தில்லைத் தரிசனங் கண் டார்க்கு ஜன்மம் இல்லை யென்று சொன்னாரே! எனக்குச் சிதம்பரதேவன் எப்போது வருவாரோ! கதியளிப்பாரோ! இந்த அற்ப வாழ்வை யழிப்பாரோ! அருள் புரிவாரோ! அம்பலவாணன் ஆதரிப்பாரோ!



நந்தனார் அந்தணராகி அக்கினியி னின்றும் எழுந்தது.



சின்ன ஜாதியான் என்று சீச்சி என்பாரோ! குளக் கரையில் நின்று கூப்பிடுகின்றேனே! கேள்விமுறை யில்லையோ! இந்த ஜன்மம் எடுத்தது போதும், நொந்தேன், நொந்தேன்! இந்த ஜன்மம் வேண் டாம். தாரநில் என்ற இந்த ஜன்மம் வேண்டாம். கருணைக் கடலென்று வந்தேனே! கனகசபாபதி யைக் காணவேணுமே! ஆடிய பாதத்தை யடைய வேணுமே! ஈனஜாதியா னாயினும் ஈடுபாட்டை மறந் தேனோ! கெட்டேனென் றல்லோ உன்னை யடைந் தேன்! தப்பிதம் எத்தனை யிருந்தபோதிலும் கைப் பிடித் தாண்டு கொள்வது நின் கடமையல்லோ! தள்ளு வாயோ, கொள்ளுவாயோ அறிகிலேன்! தள்ளிவிட் டாலும் போகேன்!” —இவ்வாறு அழுதுகொண்டே அக் குளக்கரையிலேயே திகைத்தபடி இருந்தார். சூரியனும் மேற்கட லணைந்தான்.

வைகறையில் இழிபிறவி நடையாயிற்றே என்று ஏங்கிக் கிடந்த நந்தனார் நிலைமையைச் சிவபெருமான் அறிந்தருளி அவருடைய வருத்த மெல்லாம் தீர்ப்ப தற்கு அவர் முன் கனவிற் றோன்றி, ‘இப் பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி, முப்புரி நூல் மார் பருடன் முன்னணைவாய்’ என மொழிந்து, அப் பொழுதே தில்லைவாழ் அந்தணர் தம் கனவிலும் தோன்றி, ‘நந்தன் என்னும் ஆதனூர்ச் சேரிய பறையன் மேலண்டைக் குளக்கரையில் எமக்கு அடிய வனாய் வந்திருக்கின்றான்; அவனுக்கு எரி யமைத்து அதன் கண் அவனை மூழ்கச்செய்து எமதிடம் கொண்டு வாருங்கள்,’ என்று சொல்லி மறைந்தார். அப் பணி கேட்ட மறையோர் யாவரும் கோயில் வாயில் முன் உதயத்துக் கெல்லாம் கூட்டங் கூடிப்

பேசி, 'எம்பெருமான் அருளிச் செய்த பணியைச் செய்யக் கடவோம்' என்று அந் நந்தனார் இருக்குமிடஞ் சார்ந்து அவரை நோக்கி 'ஐயரே! அம்பலவர் இட்ட அரும் கட்டளை மேற்கொண்டு இப்பொழுது நமதிடம் அணைந்தோம், தீ யமைத்தோம், எழுந்தருள்வீராக' என்றனர். நந்தனார் உடனே எழுந்து அவர்களுடன் சென்று கோயில் திருவாயின் முன்னர் அமைக்கப்பட் டிருந்த தீக்குழி யெய்தி எம்பெருமான் தாள்களில் பதிய வைத்த மனத்தோடு அவ்வெரியை வலங்கொண்டு அதன் கண் புக்கார். கண் மூடிக் கண் திறப்பதற்குள் அவ் வெரியி னின்றும் வெண்ணூலும் வேணிமுடியும் விளங்க புண்ணிய முனி வடிவம் ஒன்று செம்மலர் மேல் வருவது போல் நந்தனார் அந்தணராகி அக்கினியி னின்றும் எழக் கண்டனர். அந்தர துந்துபி யார்த்தது. ஆகாயத்தின் கண் வானவர் மந்தார மலர்மாரி பொழிந்தனர். தில்லைவா ழந்தணர்கள் திருவுருவத்தைக் கண்டு கும்பிட்டுத் தொழுதார்கள். சிவ னடியார்கள் எல்லோரும் நந்தனாரது அடிபணிந் தெழுந்து அகங்களிப் படைந்தனர். திருநாளைப் போவாராகிய திருமறை முனிவர் தில்லைவா ழந்தணருடன் திருக் கோபுரத்தைத் தொழு திறைஞ்சித் திருக்கோயிலுள் புகுந்து சபா நாயகர் எழுந்தருளி யிருக்கும் திருமன்றலின் எல்லையில் நின்றார். அவருடன் சென்ற தில்லைவா ழந்தணர்கள் முதலாகிய திருக் கூட்டத்தார் யாவரும் நின்றதைக் கண்டாரே யன்றி சென்றதைக் கண்டாரில்லை. அந்தணர்கள் அதிசயித்தனர். அருமுனிவர் துதி செய்தனர். தம்மை வந்தணைந்த திருத்தொண்டராகிய திருநாளைப் போவார் என்னும் நந்தனார் வினை



மாசறுந்த தாமரை யொக்கும் தமது ஆடிய பாதங்களாகிய துணையடி நீழலி லிருந்து எக்காலும் தம்மைத் ழுதுகொண்டு இடையறா இன்பத்தை யடைந்து ந்துகொண் டிருக்க அந்தமிலா ஆநந்தப் பெருங் த்தராகிய சபாநாயகர் திருவருள் புரிந்தருளினார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகித் தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைகரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.

திருநாவுக்கரசர்

183368

Printed at the Caxton Press, Madras—1924 (A)

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்க |
|---|---|---|
| 1. | தெய்வக் குழந்தை ... ... | 1 |
| 2. | சிறு பிள்ளை ... | 7 |
| 3. | மாட்டுக்காரப் பையன் ... ... | 20 |
| 4. | ஆட்காரன் ... ... | 31 |
| 5. | சிவனடியான் ... ... | 39 |
| 6. | நாளைப் போவான் ... ... | 52 |
| 7 | ஒளியி லொளிந்தான் ... ... | 73 |